மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 2 | மாதமிருமுறை ★ 15-8-53 ★ | இத

அவர் சென்ற வழியில் இவரும்!



பாசிசக் கொள்கையைத் துணையாகக் கொண்டு சர்வாதிகார [illegible] சென்று நாசமடைந்தான் கொடுங்கோலனாகிய ஹிட்லர். அதே ஹிட்லரின் தன்மையில் புதிய கல்வித்திட்டத்தைத் துணை யாகக் கொண்டு சர்வாதிகாரப் பாதையிலே செல்கிறார் [illegible]

ஜனநாயகம் — ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்

ஜனநாயகத்தின் பண்பாடுகளை, முதன் முதல் உணர்ந்து, அவைகளை உலகுக்கு உணர்த்திக் காட்டிய நாடு கிரேக்க நாடாகும். கிரேக்க நாட்டில் விளங்கிய ஒவ்வொரு நகரமும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களை உள்ளடக்கிக் கொண்டு, தனித்தனி ஜனநாயகக் கூறுகளாக விளங்கின.

உலகில் மற்றைய நாடுகளெல்லாம், சிறு அரசுகளாகவோ பேரரசுகளாகவோ திகழ்ந்து, அரசன் அல்லது பேரரசன் கீழ், ஆணை செலுத்தப்பட்டு வந்த நேரத்தில், கிரேக்க நாடு மட்டும் தனித்தனி நகர அரசுகளாகப் பிரிந்து, தன்னாட்சியுடைய குடியரசுகளைக் கொண்டதாக விளங்கி வந்தது. இதற்குக் கிரேக்க நாடு பல மலைகளாலும், வளைகுடாக்களாலும், பெரிய பள்ளத்தாக்குகளாலும் பல்வேறு நகரங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று எளிதான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வசதியில்லாமலிருந்தது ஒரு காரணம் ஆகலாம்.

‘ஜனநாயகம்’ என்ற சொல் இந்த நாட்களில் கொடுக்கும் முழுப்பொருளையும் அந்த நாட்களில் உணர்த்தவில்லை என்றாலும், ‘ஜனநாயகம்’ கிரேக்க நகரங்களில்தான் அரும்பெடுத்து மலர்ந்தது என்னலாம். அவர்கள் கொண்டிருந்த ஆட்சி முறைக்கு ‘ஜனநாயகம்’ அதாவது ‘டெமாக்ரஸி’ (Democracy) என்று பெயரிட்டனர். ‘டெமாஸ்’ (Demos) என்ற சொல் கிரேக்க மொழியில் மக்களை (People) உணர்த்தும் ஒரு சொல்லாகும். ‘டெமாக்ரஸி’ (Democracy) என்பது ‘மக்களால் நடத்தப்படும் ஆட்சி’ (Government by the People) அல்லது ‘பொது மக்களின் சபையால் ஆளப்படும் ஆட்சி’ (Government by the whole body of citizens) என்பதை உணர்த்துவதாகும்.

கிரேக்க நகரில் நகர மக்கள் (Citizens) என்ற தலைப்பில் எல்லோரும் அடங்குவதில்லை. ஏறத்தாழ பாதிபேர்தான் அந்தப் பெயர்க்குரிய உரிமையைப் பெற்றவர்களாக இருந்தனர். எஞ்சிய பாதிப்பேர்கள் அடிமைப்படுத்தப்பட்ட அடிமைகளாகவே கருதப் பட்டனர். கிரேக்க நாட்டிலேயே பிறந்து, அவனுடைய தந்தை வெளியிலிருந்து வந்தவனாக இருந்தால் அவன் ‘நகர மக்கள்’ உரிமையைப் பெற முடியாது. எனவே வாக்குரிமை செலுத்தக் கூடிய நகரமக்களாகக் கருதப்பட்டவர்களின் எண்ணிக்கைச் சொற்பமாக இருந்ததால், ஏதாவது ஒரு முக்கியமான பொருள் குறித்து முடிவு எடுக்க அவர்கள் எல்லோரும் எளிதில் ஒன்று கூடுவதற்கு வசதியாக இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு பாராளுமன்றம் அமைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படாததற்குக்காரணம், வாக்குரிமை அளிக்க உரிமை வாய்ந்தவர்களின் எண்ணிக்கை போதுமான அளவு குறைவாக இருந்தது ஆகும். இந்தக் காலத்தில் நாட்டாட்சியின் கீழ்க் கோடானுகோடி பேர்கள் குடிமக்களாக அமைந்து விடுகின்றனர். கோடானுகோடி பேர்களும் ஒன்றுகூடி, விவாதம் புரிந்து, முடிவு எடுத்து, அரசாங்க நடவடிக்கைகளைக் கவனிப்பது என்பது இயலாத செயலாக இருப்பதால், பதினாயிரக்கணக்கானவர்களுக்கு ஒருவர் வீதம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

பண்டைக்காலத் தமிழகத்தில் நாட்டின் ஆட்சி குடியரசு ஆட்சியாக இல்லாவிட்டாலும், சிற்றூர் பேரூர்களின் ஆட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஊராளும் மன்றங்களால் ஆளப்பட்டு வந்துள்ளன. வாக்குரிமைச் சீட்டுகளாகிய ஓலைகளை ஊர்ப் பொது மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள குடத்தில் பொதுமக்கள் போட, சான்றோர் அவ்வோலைகளை எடுத்துப் பிரித்து எண்ணுவார்கள் என்ற குறிப்பு அகப்பொருட் செய்யுள் ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. தலைவன் செல்லும் பாலை நிலம் ஒன்றினை விரித்துக் கூற வந்த புலவர், அப்பாலை வனத்தில் கிடக்கும் பிணங்களின் வயிற்றைக் கழுகுகள் கொத்தி, உள்ளேயுள்ள குடல்களை வெளியே எடுக்கும் காட்சியை உவமை கொடுத்து விளக்க விரும்புகிறார். ஊர்ப்பொது மன்றத்தில் குடத்தில் போடப்பட்ட ஓலைகளைச் சான்றோர் எடுப்பது போல கழுகுகள் பிணத்தின் குடல்களை எடுக்கின்றன என்று கூறியுள்ளார். ‘ஜனநாயகம்’ என்ற பெயர் தரப்படவில்லையே ஒழிய, அதன் தன்மைகள் ஊராளும் மன்றங்களிலே நிலவி வந்திருக்கின்றன ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்பது மட்டும் தெளிவாகிறது.

கிரேக்க நாட்டில் வளர்ந்தோங்கிய ஜனநாயகத்தின் பண்புகளை பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற அறிஞர்கள் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளார்கள். அவைகள் வியந்து, பாராட்டிப் போற்றுவதற்குரியவாகும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15-8-53 சனிக்கிழமை

ஆணவப்போக்கு

—(0)—

பண்டித நேருவின் நெருங்கிய நண்பரும், இதுவரையில் இந்திய அரசாங்கத்தின் நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் நல்ல நாயகமாக விளங்கி வந்தவரும், 'காஷ்மீர் சிங்கம்' என்று காங்கிரஸ்காரர்களால் பெரிதும் போற்றப்பட்டவருமான ஷேக் அப்துல்லா, இன்றைய நிலையில், ஆட்சி பீடத்திலிருந்து அகற்றப்பட்டுச், சிறைச்சாலையிலே தள்ளப்பட்டுள்ளார்.

ஷேக் அப்துல்லாவுக்கு இவ்வளவு விரைவில் இந்த நிலை ஏற்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை; வேறு யாராலுமே எதிர்பார்க்கமுடியவில்லை என்றால், தாம் செய்வது எல்லாம் சரி என்ற நினைப்போடு இருந்தவரும் அவரால் எப்படி எதிர்பார்க்க முடியும்!

ஷேக் அப்துல்லாவின் ஆணவப்போக்கும், திமிரான பேச்சும், சர்வாதிகார நடவடிக்கையுமே இந்த நிலைமைக்கு அவரை ஆளாக்கிவிட்டன என்பதை, காஷ்மீர நாட்டின் அதிபரான கரன்சிங் அவர்களின் அறிக்கையும், மூன்று மந்திரிகள் முன்கூட்டியே ஷேக் அப்துல்லாவுக்கு எழுதிய முடங்கலும் தெளிவாக்குகின்றன.

ஷேக் அப்துல்லாவின் அமைச்சர் குழுவில் பொறுப்பேற்றிருந்த மூன்று அமைச்சர்களான தோழர்கள் பக்ஷி குலாம் முகம்மது, கிரிதரிலால் டோக்ரா, ஷாம்லால் ஸராப் ஆகியவர்கள் தங்கள் முடங்கலில்,

"தெளிவாகவும், வெளிப்படையாகவும், ஆணித்தரமாகவும் அறிவிக்கப்பட்டுள்ள அரசாங்கக் கொள்கைகளைப், பின்பற்றும் பொறுப்பைத் தாங்கள் தொடர்ந்து கட்டிக் கழித்து வந்திருக்கிறீர்கள். அந்தக் கொள்கையை அமல் நடத்தவேண்டிய பொறுப்பு தமக்கு உண்டு என்பதைக்கூட ஒப்புக்கொள்ளாமல் இருந்து வந்திருக்கிறீர்கள்" என்றும்,

"இலட்சியம், செயல் ஆகியவற்றில் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டீர்கள். நேர்மையும், தூய்மையும், திறமையும் வாய்ந்த ஆட்சிமுறையை இப்பொழுதுள்ள சர்க்காரால் கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு இல்லாமற்போய்விட்டது" என்றும், "நீங்கள் எங்களுடைய எண்ணங்களை அலட்சியம் செய்ததுடன் நில்லாமல் மக்களின் குறைகளைப்பற்றி விசாரணை நடத்தும் பொருட்டு சர்க்காரால் நியமனம்செய்யப்பட்டுள்ள குழுவினரின் சிபாரிசுகளையும் அலட்சியம் செய்துவிட்டீர்கள்" என்றும்,

"தங்களது பொறுப்பற்ற பேச்சுக்களின் காரணமாகப் பொதுமக்களின் நம்பிக்கையைத் தகர்த்துவிட்டீர்கள். நாட்டை ஒரு பெரிய நெருக்கடியில் அமுக்கிவிட்டீர்கள். அதன் விளைவு அபாயகரமாக இருக்கும். அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் நாட்டில் ஏற்பட்டிருந்த நிலைமையை கவனிக்கத் தவறியதோடல்லாமல் தங்களது சொல், செயல்களால் அந்நெருக்கடியை மேலும் தூண்டிவிட்டிருக்கிறீர்கள்" என்றும், குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தோழர் பக்ஷி குலாம் முகம்மது அவர்கள் காஷ்மீர் முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டவுடன், வானொலியில் பேசிய பேச்சில்,

"கொஞ்சகாலமாக எங்கள் மாஜி சகாக்கள், ஜீவாதாரமான கொள்கைகளைப் புறக்கணித்து வந்ததுடன், நிர்வாகம், கட்சி இவற்றின் எல்லாத் துறைகளிலும் ஜனநாயகம் செயல்படுவதற்கான சின்னங்களனைத்தையும் அழிக்கவும் முற்பட்டது கண்டு நாங்கள் மிகவும் வருத்தமடைந்தோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப்பட்ட குறைபாடுகளைக் கொண்டிருந்ததற்காகவும், குற்றங்களைப் புரிந்ததற்காகவும் ஷேக் அப்துல்லா காஷ்மீரின் அதிபரால் அகற்றப்பட்டுச், சிறைக்கோட்டத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டார்.

ஷேக் அப்துல்லா என்ற சொல்லை எடுத்து விட்டு, அந்த இடத்தில் இராசகோபாலாச்சாரியார் என்ற சொல்லைப் போட்டுவிட்டால், ஷேக் அப்துல்லா மீது சாட்டப்பட்டுள்ள குறைபாடுகளும், குற்றங்களும், அப்படியே வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து ஆச்சாரியாருக்குப் பொருந்தி வருதலைக் காணலாம்.

ஆனால், நிலைமையில் மட்டும் ஒரே ஒரு வேறுபாடு; ஷேக் அப்துல்லா, தாம் செய்த குற்றங்களுக்காகச் சிறைச்சாலையிலே தள்ளப்பட்டுள்ளார், அந்த நாட்டு அரசின் அதிபரால்; ஆனால் அதே தன்மையனவான குற்றங்களைச்செய்த ஆச்சாரியார், இந்த நாட்டு அதிபரான கவர்னர் பிரகாசாவால் 'வெண்சாமரம்' வீசப்படுகிறார்!

ஒரே மாதிரியான குற்றத்தைச் செய்த ஒரு நாட்டின் முதன் மந்திரி காவலில் வைக்கப்பட்டுள்ளார்; அதே குற்றத்தைச் செய்த மற்றொரு நாட்டு முதன் மந்திரி 'பாராக்குக்' கூறப்படுகிறார் : என்னே, விந்தையான நிலைமை?

இந்த இரண்டுவகைச் செயல்களையும், ஆமோதித்துக்கொண்டு. டில்லி பீடத்தில், ஜனநாயகத்தின் பேரால், பண்டித நேரு வாளா வீற்றிருக்கிறார் என்பது எல்லாவற்றையும்விட விந்தையான செயலாகும்.

ஆச்சாரியார் கொண்டுவந்துள்ள புதிய கல்வித் திட்டத்தை, உடனடியாக அமுலாவதை நிறுத்திவைத்து, அதனை நிபுணர்கள் அடங்கிய குழுவின் ஆய்வுக்கு விடவேண்டும் என்று, சட்ட மன்றத்தில். பெரும்பான்மையினரின் வாக்குரிமையினால் நிறைவேற்றப்பட்ட திருத்தத் தீர்மானத்தை, நடைமுறைக்குக் கொண்டு வராமல், வல்லடி வழக்கு செய்கிறார் ஆச்சாரியார் என்றால், ஜனநாயகப் பண்பை அவர் எவ்வளவு துச்சமாகக் கருதுகிறார் என்பதை யாரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். புதிய கல்வித் திட்டத்தை நிறுத்திவைத்துப், பழையபடியே படிப்பைச் சொல்லித்தர, செய்யவேண்டிய செயற்கரிய செயல் என்னவென்று கேட்கிறோம்? தாம் கொண்டுவந்த கல்வித் திட்டம் இடையிலே முறிந்து போவதால், தன்மானம் பறி போகக்கூடாது என்பதற்காக, நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் பாழாக வேண்டுமா ?

ஹிட்லர் சென்ற வழியில் ஆச்சாரியார் செல்கிறார் முடிவு என்ன ஆகுமோ ?

சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களில், தமக்கு ஒத்துவருவனவற்றை மட்டுமே நடைமுறையில் கொண்டு வருவது, தமக்கு ஒத்துவராதனவற்றைச் சிபார்சு செய்வதாகக் கொண்டு தம் விருப்பம்போல் நடந்து கொள்வேன் என்று கூறுவது என்ற முறையில் ஒரு முதன் மந்திரியின் போக்கு இருக்குமானால், சட்டமன்றம் ஏன்? அங்கே பிரதிநிதிகள் வருவானேன்? தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வானேன்? பெரும்பான்மையோர் கருத்துப்படி ஜனநாயக ஆட்சி நடைபெறும் என்று வீராப்பு பேசுவானேன்? தேர்தல் என்று ஒன்று தேவைப்படுவானேன்? அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுவானேன்? இவைகளெல்லாம் இல்லாமல், முதன் மந்திரி இராசகோபாலாச்சாரியார் தாமே தமக்கு ஏற்றதைச் செய்து கொண்டும், தமக்கு ஏலாதவைகளை செய்யாமல் விட்டுக்கொண்டும் செல்லலாமே! ஜனநாயகத்தின் பேரால் நாசிசம் நடைபெறுகிறது!

சட்ட மன்றத்தில் நிறைவேறும்சட்டங்களைச் சிபார்சாகத்தான் பாவிப்பது ஆச்சாரியார் கருத்து என்றால், ஓட்டெடுப்பில் பரபரப்புக் காட்டுவானேன்? காங்கிரஸ் கட்சியின் கொறடா தோழர் ராஜாராம் (நாயுடு) ஓடி அலைந்து காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களைச் சட்ட மன்றத்தில் ஓட்டெடுக்கும்போது கூட்டிவருவானேன்? கட்சிக்கட்டுப்பாட்டை வற்புறுத்தித் தோழர்கள் ஆறுமுகம், ஆர். வி. சாமிநாதன், கோசல்ராம் போன்றவர்களைக் கட்டுப்படுத்துவானேன்? ஓட்டெடுப்பில் ஆளும் கட்சி அவ்வளவு அக்கறை காட்டுவானேன்? வெற்றிபெற வேண்டும் என்பதிலே ஆர்வங்காட்டிய ஆச்சாரியார், தம் தோல்வியை ஒப்புக்கொண்டு, மானமுள்ளவராக இருந்தால், ஆட்சியை விட்டுத் தாமேயகன்றிருக்க வேண்டும்; ஜனநாயகப் பண்புடையவராக இருந்தால் திருத்தச் சட்டம் கேட்டுக்கொண்டுள்ளபடி நடந்திருக்க வேண்டும் இரண்டு நேர்மையான செயல்களில் எதையும் செய்யாமல் ஆணவப் போக்கிலே, திமிரான பேச்சுடன், சர்வாதிகாரமாக நடந்துவருகிறார் என்றால், ஷேக் அப்துல்லாவுக்குக் கிடைத்த 'பரிசு' ஆச்சாரியாருக்கும் அளிக்கப்படவேண்டாமா என்று கேட்கிறோம்.

அறிஞர் அண்ணாவின்

அறிக்கை

[அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் தூண்டி விட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சென்னை மாகாண நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள் **11-8-53-ம்** நாளன்று வெளியிட்ட ஆங்கில அறிக்கையின் கருத்துக்களை உள்ளடக்கியதாக, **அறிஞர்** அண்ணா அவர்களாலேயே எழுதப்பட்ட தமிழ் அறிக்கை கீழே தரப்படுகிறது.]

கனம் நீதிபதி அவர்களே!

சர்க்காரால் குற்றவாளி என்று கூறப்பட்டு, தங்கள் மேலான மன்றத்திலே நிறுத்தப்பட்டிருக்கும் நான், என் சார்பாக இந்த விளக்கத்தை எடுத்துரைக்க வாய்ப்பளிக்கப்படுவதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். வாழ்க்கையில் ஓர் பாகத்தான சம்பவம் என்ற முறையிலேயே இந்த நாளையும், நிகழ்ச்சியையும் நான் கருதுகிறேன். இந்தச் சம்பவத்தின் முக்கியத்துவத்துக்கு ஏற்ற வகையிலேயே என் விளக்கத்தைத் தங்களிடம் கூறிக்கொள்கிறேன்.

நானும், என் நண்பர்கள் நால்வரும், பல்வேறு வகையான குற்றங்கள் செய்திருப்பதாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அதற்கு ஆதாரவான பல சாட்சியங்களும் அளிக்கப்பட்டுள்ளன. சட்ட சம்பந்தமான நுணுக்க உரைகள் கூறித் தப்பித்துக்கொள்ளும் முயற்சியென்றோ, வாதாடும் முயற்சியென்றோ, இந்த விளக்கத்தைத் தங்கள் முன்பு தரவில்லை; நானும், என் நண்பர்களும் எத்தகைய சூழ்நிலையில் இருந்து வருகிறோம் என்பதையும், நாடு உள்ள நிலைமையையும், இந்த வழக்கின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது என்பதை உரைக்க முற்படுகிறேன்.

நான், தமிழகத்தில் செல்வாக்கு மிகுந்ததும் ஆளும் கட்சியை அகற்றி ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வலிவும் வாய்ப்பும் பெற்றதும், நகர்களிலும், பட்டி தொட்டிகளிலும் கிளைகள் கொண்டதும், சர்க்கார் தரப்பு சாட்சியம் குறிப்பிடுகிறபடி ஒரு லட்சம் உறுப்பினர்கள் கொண்டதுமான, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வருபவன். மற்ற நால்வரும் எனக்குத் துணை நிற்கும் தோழர்களாவர்.

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடத் தனி நாடு அமைக்கும் அடிப்படையில் பணியாற்றிவரும், மக்கள் இயக்கத்தின், மாண்புள்ள அமைப்பு.

வடநாட்டு ஏகாதிபத்யப் பிடியிலிருந்து விடுபட்டு, சமுதாய சமத்துவம், பொருளாதார நீதி கொண்டதாக, திராவிடநாடு, விளங்க வேண்டும் என்பதே கழகத்தின் நோக்கம்.

இன்றைய அரசியல் அமைப்பு முறை, திராவிடநாட்டை, அடிமைக்காடு ஆக்கி, வடநாட்டு ஏகாதிபத்யப் போக்கினரிடம் சிக்கிச் சீரழியச் செய்கிறது, என்பது, எங்கள் அழுத்தமான நம்பிக்கை; இந்த நிலையை மாற்றி அமைக்க, உறுதி பூண்டிருப்பவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர்.

கட்சி அரசியலில் ஈடுபடாதவரும், கற்றோர் போற்றும் மேதையும், அரசியல் சட்டதிட்ட ஆராய்ச்சியில் ஈடு இணையற்றவர் என்று பாராட்டப்படுபவருமான, சர். ஜென்னிங்ஸ், எனும், உயர்நீதி மன்ற அதிபரும், இன்றைய அரசியல் சட்ட திட்டம், தென்னாட்டை வடநாட்டவரின் பிடியில் சிக்க வைத்திருக்கிறது என்ற உண்மையை எடுத்துரைக்கிறார். இந்த உண்மையை, சென்னை சர்க்காரில் உள்ள மந்திரிமார்களும்கூட, அனுபவ வாயிலாக அறிந்து, அவ்வப்போது, சுட்டிக்காட்டியும் உள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த உண்மையை எடுத்துரைத்து, மக்களின் ஆதரவைத் திரட்டி, அமைதியான முறையில், பலாத்காரமற்ற தன்மையில், கிளர்ச்சிகள் நடத்தி, திராவிடத்தை விடுவிக்க வேண்டும் என்ற உறுதியுடன் பணியாற்றி வருகிறது.

அதுபோலவே, திராவிடச் சமுதாயம், ஜாதிபேதம் அற்றதாயும், மூடத்தனம்-பழமைப்போக்கு-வர்ணாசிரமம் அற்றதாகவும் அமைய வேண்டும் என்பதும், அந்த நோக்கத்துக்காக,

அமைதி கெடாத வகையிலும், பலாத்காரமற்ற முறையிலும், பணியாற்றி வருவது என்பதும் திராவிட முன்னேற்றக் கழகத் திட்டமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாதாரத் திட்டம், சமதர்மத்தை ஏற்படுத்துவதாகும்.

அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலும், மகத்தானதோர் புதிய நிலையை ஏற்படுத்துவதற்காக உள்ள, திராவிட முன்னேற்றக் கழகத்தின் எல்லா நடவடிக்கைகளும், பொறுப்புணர்ச்சியுடனேயே நடத்தப்பட்டு வருகின்றன. சொல்லாலோ, செயலாலோ பலாத்காரத்துக்கு ஆக்கம் தருவது போன்ற இழிதன்மை துளியுமற்ற நிலையை, திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது. இதனை சர்க்கார் தரப்பிலே அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்களே உறுதிப்படுத்துகின்றன.

கனம் நீதிபதி அவர்களே!

இத்தகைய மாண்புள்ள ஒரு கழகத்தின் முன்னணியில் உள்ள நாங்கள் ஐவரும் பொறுப்பை மறந்தும், அமைதியைக் குலைக்கும் முறையிலும், சட்டங்களை மீறும் வகையிலும் சில பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறோம். எமது கழகத்தின் நோக்கத்தின் நேர்த்தி, நடவடிக்கைகளின் தூய்மை, கழகத்தின் வரலாறு, ஆகியவற்றைக் கவனிக்கும் எவரும், எம்மைக் குற்றவாளிகள் என்று கூற முன் வரமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

நாலாண்டுக்காலமாக, எமது பணியின் விளைவாக, நாட்டிலே, பலாத்காரமோ, வகுப்புக்கலகமோ, அமைதிக் குறைவோ ஏற்பட்டதாக ஒரு சிறு ஆதாரமும், கழகத்தின்மீது பழி சுமத்த வேண்டுமென்று துணிந்து முனைபவர்களால் கூடக் காட்டமுடியாது. கண்ணியமும், நீதி நேர்மையும் கொண்ட முறையில், கழகப் பணி நடைபெற்று வருவதற்கு முடிந்ததே என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே நாங்கள் பெருமைப்படுகிறோம், பூரிப்படைகிறோம். ஏனெனில், நாட்டிலே, திராவிடச் சமுதாயத்துக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளும், அக்கிரமங்களும், யாரையும் எளிதிலே ஆத்திர மூட்டத்தக்கவையாக உள்ளன. நாடாண்ட சமுதாயம் இன்று நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்று இழிநிலையில் வைக்கப்பட்டு, பாழ்படுத்தப்படுகிறது. பண்பு நசுக்கப்பட்டு, நிலை குலைக்கப்பட்டு, திராவிட சமுதாயம் சீரழிக்கப்பட்டு வருகிறது. அரசியல் துறையிலே, திராவிடர்கள் அடிமைகளாக்கப்பட்டு, அவதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். பொருளாதாரத் துறையிலேயோ, திராவிடப் பெருங்குடி மக்கள், தரித்திரர்களாகி நலிகிறார்கள். திராவிட இனம் சீரழிக்கப்பட்டு, இழிநிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தக் கொடுமையை நிரந்தரமாக்கிவிடும் பயங்கர முயற்சியும், இடைவிடாது நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், திராவிட மக்கள் மனம் எரிமலையாகிறது, கண்கள் குளமாகின்றன. இந்த நிலையில் திராவிட மக்கள் தங்கள் இழிநிலையைப் போக்கிக்கொள்ள, அக்கிரமத்தை அழித்தொழிக்க, சட்டங்களை மீறியும், பலாத்காரத்திலே ஈடுபடும் செயல் பல புரியாதபடி தடுத்து நிறுத்தி, அமைதியும் அறிவும் கொண்டதும், கண்ணியமும், கட்டுப்பாடும் மிகுந்ததும், சட்டத்தின் மாண்பை மதிப்பதும் பலாத்காரத்தை அறவே நீக்கியதுமான, நடவடிக்கைகளில், கிளர்ச்சிகளில், அறப்போர்களில், திராவிடரை ஈடுபடச்செய்யும் பெரும் பணியைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்துவருகிறது. இந்தப் பெரும் பணியில் ஈடுபடும் வாய்ப்புக் கிடைத்ததற்காகக் களிப்படைந்து, கடமையைச் செய்துவரும் நாங்கள், இந்தக் குற்றவாளிகள் என்று கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறோம். எங்கள் மனக்கண் முன்பு, பல்வேறு நாட்டு விடுதலை வீரர்கள், வழக்கு மன்றங்களிலே, ஆதிக்கக்காரர்களால் நிறுத்தப்பட்டு, ஒளி நிரம்பிய கண்களுடன், நெஞ்சுரத்துடன், அவர்கள் 'தீர்ப்புக்களை' ஏற்று மகிழ்ந்து, 'காணிக்கை' செலுத்திய காட்சிகள் தெரிகின்றன. அந்தக் காட்சிகள் எங்கள் மனத்தூய்மையையும், உறுதியையும் அதிகமாக்குவதுடன், தாயகம் விடுதலை பெறுவது உறுதி என்ற நம்பிக்கையையும் மலரச் செய்கின்றன. அவற்றின் நறுமணம் பெற்று மகிழ்கிறோம்.

ஆதிக்கத்தையும், அநீதியையும், எதேச்சாதிகாரத்தையும், அக்கிரமத்தையும் எதிர்த்தொழிக்க வேண்டியது, அறநெறியில் நம்பிக்கை கொண்டவரின் நீங்காக் கடமையாகும். மனித குலம் மாண்பு பெறுவதே, அந்தக் கடமையை, எத்தகைய கஷ்ட நஷ்டம் ஏற்பதாயினும்

லங்காது, நிறைவேற்றப் பலர் பணியாற்றியதனால்தான். அந்த முறையிலேதான், நாங்கள் எங்களை, அந்தத் தூய பணிக்கு அர்ப்பணித்துவிட்டவர்கள். அந்த நிலை, எங்களுக்கு. வழக்குமன்றத்திலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ள இதுபோது, உறுதிப்படுகிறது. எனவே, எமது நெஞ்சு உரத்தையும், நேர்மையையும், புனிதக் கடமையையும் வளர்க்கும், வாய்ப்பென்றே இதனை நான் வரவேற்கின்றேன்.

மதிப்புக்குரிய நீதிபதி அவர்களே!

யாரார், எவ்வப்போது, எத்தகைய ஆதிக்கத்தை எதிர்க்கக் கிளப்பியபோதும், சட்டத்தை மீறினார்கள், மீறும்படி மக்களைத் தூண்டினார்கள், என்றே, குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அந்தக் குற்றவாளிப் பரம்பரையோ, குன்றாது குறையாது, வளர்ந்த வண்ணமும் இருக்கிறது; உலகுக்கு புது வண்ணமும் தருகிறது. யாரார், மக்களின் மாண்பு, ஆட்சியாளரின் போக்கால் கெடலாகாது, என்று வாதாடினார்களோ, போராடினார்களோ அவர்களெல்லாம், சட்டத்தை மீறினார்கள் என்று சிறையில் அடைக்கப்பட்டனர்; உத்தமர் பலர் உயிரிழந்தனர்; சித்திரவதைக்கு ஆளானோர் பலர். அவர்களின் 'பட்டியல்'படிக்கும்தோறும், படிக்கும்தோறும் தித்திக்கும் வீர வரலாறுகளாகிவிட்டன இன்று. அன்றோ, அவர்கள், 'குற்றவாளிகள்' என்றேகூண்டில் நிறுத்தப்பட்டனர்.

சட்டத்தை மதியாதார் சிலர் உண்டு. சட்டத்தை மீறுவோர் சிலர் உண்டு.

சொந்த இலாபத்துக்காக, பிறரைக் கெடுப்பதற்காக, தீய நோக்கத்துடன் சட்டத்தை மீறுவோர் உண்டு. அவர்கள் சமுதாய விரோதிகள், நாட்டை நாசமாக்கும் நச்சுப் பூச்சிகள்.

நாட்டை மீட்கவும் நல்லாட்சி நிறுவவும், ஆட்சியாளரின் அக்கிரமத்தைப் போக்கவும், அறப்போர் நடத்துபவர்கள், தமது தூய பணியிலே, புனிதக் கடமையிலே ஆட்சியாளர்கள் சட்டம் என்ற தடைக் கற்களைப் போட்டு அடைத்தால், அறப்போர் வீரர்கள், அந்த தடைக் கற்களை நீக்கிவிட்டு, மேலால் செல்வர்; அதன் விளைவாக, வேதனை கொட்டினும், புன்னகை புரிவர். அத்தகைய புன்னகை, உத்தமர் காந்தியாரின் புகழை உலகெங்கும் பரப்பிற்று. அந்தப் புன்னகை, உலகிலே பல்வேறு நாடுகளில் அக்கிரமம் அழியவும், நீதி துலங்கவும், மமதையாளரின் போக்கு மடியவும், மக்களின் வாழ்வு துலங்கவும் வழிசெய்து தந்தது. அத்தகையோர் சட்டங்களை மீறினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர், தண்டனை பெற்றனர். எனினும் வரலாறு அத்தகைய 'சட்டம்' மீறியவர்களைக் குற்றவாளிகள் அல்ல என்று தீர்ப்பளித்திருக்கிறது. அவர்கள் உலகை மீட்ட உத்தமர்கள் என்று கொண்டாடப்படுகின்றனர்.

எனவே, சட்டத்தை, மீறினவர்கள், மீறத் தூண்டியவர்கள், என்ற பொதுப் பேச்சை, கூர்மையாக ஆராய்ந்தால், சட்டத்தை மதியாமல் சுயநலத்துக்காக மீறியவர்களுக்கும், பொது நலனுக்காகப் பணியாற்றும்போது, சட்டத்தைக் கொண்டு தடுத்தால், அதை மீறியவர்களுக்கும் உள்ள மகத்தான வித்தியாசம் விளக்கமாகும். மலர்த் தோட்டத்திலே புகுந்த மந்திக்கும், களையெடுத்துத் தோட்டத்தை வளப்படுத்தும் உழவனுக்கும் உள்ள வித்தியாசம், இதிலே காணக் கிடைக்கும்.

எனினும், சட்டத்தை மீறினார்கள், மீறும்படி மக்களைத் தூண்டினார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகி, தண்டனை பெறாத, விடுதலை வீரர்களில்லை.

கனம் நீதிபதி அவர்களே!

சட்டம் மக்களிடையே அமைதியையும், ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலைநாட்ட, நாகரிக அறிவு தந்த சாதனம். ஒரு ஆட்சி, தன் நடவடிக்கைகள் மூலம், மக்களின் மனச்சாந்தியையும் அமைதியையும் கெடுத்துவிட்டு, சமாதானத்தைக் குலைத்துவிட்டு, மக்கள் மனதிலே அணைக்கமுடியாத ஆத்திரத்தை மூட்டிவிட்டு, மக்கள் தம் குறைகளை எடுத்துரைக்கும் வழிகளை எல்லாம் அடைத்துவிட்டு, பீறிட்டெழும் உணர்ச்சியை மக்கள், எவ்வகையாலேனும் ஆட்சியாளர்க்குக் காட்டித் தீரவேண்டும் என்ற கட்டத்துக்கு வந்த பிறகு, அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டச் சட்டம் இருக்கிறது, அதை மீறுவது பெருங்குற்றம் என்று கூறிச் சட்டத்தைக்கொண்டு,கிளர்ச்சிசெய்யும் மக்களை அடக்க முற்பட்டால், அறநெறி அறிந்த, கனம் நீதிபதி அவர்களே, அந்த ஆட்சிக்குச்சட்டத்தின் துணையைத்தேடும் அருகதை இருக்கிறதா, என்று அறிய ஆசைப்படுகிறேன். மக்களின் நலனைக்கெடுக்கும் போக்குள்ள எந்த சர்க்காரும், மக்கள் நலனுக்காகச்சமைக்கப்பட்

டுள்ள சட்டத்தைத் துணைக்கழைக்கும் உரிமையை இழந்துவிடுகிறது, என்றே எண்ணுகிறேன். இந்த அறிவொளியைத்தான், விடுதலை வீரர்கள், பரப்பி, உலகிலேகப்பிக்கொண்டிருந்த, அடிமை இருளை அகற்றினார்கள். அந்த அறிவொளியின், சிறு சிதறல்களாகத் திகழும் பெருமை எமக்குக் கிடைத்திருப்பது கண்டு மகிழ்கிறேன். எமது பணியின் தூய்மையிலே எங்கள் நம்பிக்கை மேலும் வலுவடைகிறது.

சர்க்காரின் போக்கும் நோக்கும், மக்களின் நலனுக்கு எதிராகி விடும்போது வாளாயிருப்போரும், நம்மால் ஆகுமா என்று ஏக்கம் கொள்வோரும், எதிர்த்தால் அடக்குமுறை தாக்குமே என்று அஞ்சுவோரும், மன்னிக்கப்பட முடியாத குற்றவாளிகள். நாங்கள் அத்தகைய குற்றவாளிகள் ஆகிவிடாமல் எங்கள் கடமையைச் செய்ய வாய்ப்புக் கிடைத்தது—செய்தோம்—மகிழ்கிறோம்.

எங்கள் மீது சாட்டப்படும் குற்றங்களையே, எடுத்துக் கொள்வோம்.

1. புதிய கல்வித் திட்டத்தைக் கைவிட்டு விடும்படி சென்னை மாகாண முதலமைச்சர் இல்லத்தில் மறியல் செய்வது.

2. டால்மியாபுரம் என்ற வடநாட்டு ஆதிக்கக்குறிப் பெயரை நீக்கிவிட்டு, உரிமைப் பெயரான, கல்லக்குடி என்ற பெயரை ரயில்வே அறிவிப்புப் பலகைகளில் பொறித்திடும்படி சர்க்காரைத் தூண்ட, அறப்போர் நடத்துவது.

3. இந்திய துணைக்கண்டத்தின் பிரதமர் என்ற உயர்நிலையில் உள்ள நேரு பண்டிதர், தமிழரின் கிளர்ச்சிகளை 'நான்சென்ஸ்' என்று சிறு மொழி பேசி மனதைப் புண்படுத்தியதை, அவர் அறியச் செய்யவும், திருந்தச் செய்யவும், ஜூலை 15-ம் தேதி பகல் வண்டிகளையெல்லாம் நிறுத்திக் கண்டனக் குறி காட்டுவது.

இவைகளே நாங்கள் இழைத்ததாகக் கூறப்படும் குற்றங்கள். இதற்கு ஆதாரமாக எங்கள் செயற்குழுக் கூட்டத் தீர்மானங்கள், சென்னையில் ஜூலை 12-ம் தேதி, தி. மு. கழக மாநாட்டிலே நான் பேசிய பேச்சு, 'நம் நாடு' இதழில் வெளிவந்த அறிக்கைகள், கட்டுரைகள், இவைகளெல்லாம், காட்டப்பட்டன. சாட்சியங்கள் எதையும் நாங்கள் மறக்கவில்லை—பொதுநலத்துக்காக, தூய்மையான உள்ளத்துடன், கழக நோக்கத்தின்படி, எடுத்துக் கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையும், எங்களுடையது அல்ல, என்று கூறிடும் கயமை எமக்கு இல்லை. அந்த நடவடிக்கைகள் யாவும், பலாத்காரமற்றன என்பதைக் கூறுகிறோம்; அவைகளைச் செய்வது எங்களின் தவிர்க்கமுடியாத கடமை என்று கூறுகிறோம்; நாட்டு விடுதலைப் பணிக்காக அந்த நடவடிக்கைகள் தேவைப்பட்டன. ஆகையால், அவைகளைச் செய்தது, குற்றமாகாது—எனவே நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டு விடுதலைக்கான ஆதரவு திரட்டும் அமைதியான பிரசாரத்திலும், அறிவு பரப்பும் பிரசாரத்திலும் ஈடுபட்டிருந்த நாங்கள் ஏன் இத்தகைய அறப்போர்களைத் துவக்கினோம் என்பதை விளக்கினால், எமது செயலின் தூய்மை மேலும் துலங்கும் என்று எண்ணுகிறேன்.

நாகரீகத்தையும், நல்லறிவையும், குடியாட்சி கொள்கையையும் மதிக்கும் எந்தச் சர்க்காரும், போலீசும் பட்டாளமும் போதும், மக்களின் மன மகிழ்ச்சியும் ஆதரவும் தேவையில்லை என்ற எதேச்சாதிகார ஆணவம் இல்லாத எந்த சர்க்காரும், தனது எந்த நடவடிக்கையும், மக்களால் எவ்வாறு கருதப்படுகிறது என்பதையே, துலாக்கோலாகக் கொள்ளும். நீரோக்களும், ஜார்களும் மட்டுமே தூக்குமேடை, சிறைச்சாலை, பட்டாளம், போலீஸ், இவைகளை மட்டுமே கவனித்துக் கோலாகலம் புரிவர். மக்களாட்சி அது அல்ல.

நாங்கள் எடுத்துக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டு 'குற்றங்கள்' என்று சுட்டிக்காட்டப்படும் மூன்று பிரச்சினைகளிலும், தி. மு. கழகம் பொதுமக்களின் கருத்தை ஆள்பவருக்கு அறிவிக்கும் எல்லா முறைகளையும் செவ்வனே செய்தது. பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், மகஜர்கள், வேண்டுகோள்கள், அறிவிப்புகள், தீர்மானங்கள் போன்ற சகலமும், சர்க்காரின் செவியில் விழவில்லை. ஒரு நல்ல வார்த்தை, ஒரு சிறு புன்னகை, ஒரு கேள்வி, ஒரு தலையசைப்பு, இல்லை. மக்களின் மனம் என்ன எண்ணும்? மக்களின் சார்பிலே பணியாற்றும் எமக்கு, என்ன வழி? ஜனநாயகம் கேலிக்கூத் தாக்கப்படுகிறது—மக்களின் குரல் மதிக்கப்

படவில்லை—ஆட்சியாளர், மக்களாட்சியின் மாண்பையே மதிக்க மறுக்கிறார்கள். இந் நிலையில் நாங்கள் மக்களின் மனப்போக்கை எடுத்துக்காட்டவும், சர்க்காரின் நடவடிக்கையை மாற்றச் செய்யவும், வேறு என்ன வழி காண்பது? எங்கள் வேண்டுகோள் நிராகரிக்கப் பட்டது—எங்கள் முறையீடு பயனற்றுப் போயிற்று, எனவே, சர்க்கார் புரிந்து கொள்ளக்கூடிய முறைகளைக் கையாள வேண்டி வந்தது. அந்த முறைகளும் அநாகரிகமானவை யல்ல; பலாத்காரம் கொண்டவையல்ல; சமாதானத்தைக் குலைப்பதல்ல; அமைதியை கெடுப்பதுமல்ல—அறப்போர் தொடுத்தோம்.

அறப்போர் மட்டுமல்ல, 1942-ம் ஆண்டு அக்கிரமப்போர் நடாத்தி அதனையே அறப்போர் என்று கூசாது கூறிய தலைவர்கள் ஆட்சி செய்கிறார்கள். இவர்கள் நமது அறப்போரை யாவது கவனிப்பார்கள் என்று நம்பினோம். அதன் பலன், இதோ இங்கு நாங்கள் ஐவர். ஏறத்தாழ ஐயாயிரம் தோழர்கள் சிறையில், கரமிழந்தோர், காலிழந்தோர், கண்ணிழந்தோர், உயிரையே இழந்தோர். இது நிலைமை! இது திராவிடம்! வரலாறு என்ன தீர்ப்பளிக்கும், மக்களுக்கு இவ்வளவு கொடுமை இழைத்தவர்களுக்கு, என்பது, தெளிவாகத் தெரிகிறது!

நாகரிக அரசியல் முறைப்படியும், ஜனநாயகத்தை மதித்தும், ஆட்சியாளர்கள் நடந்து கொண்டிருந்தால், அறப்போருக்கு அவசியம் எழுந்திராது. அறப்போர் துவக்கப்பட்ட பிறகும், சர்க்கார், இந்த அறப்போர், சட்டத்தை மீறும் கலகக்காரர் செயலல்ல, நல்லாட்சியையும், தன்னாட்சியையும் நாடும் பொறுப்புள்ள கழகத்தின் நடவடிக்கைஎன்பதை உணர்ந்தால், எங்களைக்குற்றவாளிகள் என்று இங்கே கொண்டு வந்து நிறுத்தி இருக்காது—மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கும்.—மக்கள் மட்டுமல்ல—மக்களின் பிரதிநிதிகள் அரசோச்சும் சட்டசபையிலே 139 உறுப்பினர்கள் வாக்களித்து, புதிய கல்வித் திட்டத்தை அமுல் செய்வதை நிறுத்திவைக்குமாறு கட்டளைபிறப்பித்தும், கனம் ஆச்சாரியார் அதனைத்துச்சமென மதித்து, துரைத்தனம் நடத்திக்கொண்டு, ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைக்கிறார். இப்படிப்பட்ட முறையினரிடமிருந்து நாங்கள் இங்கே கொண்டுவந்து நிறுத்தப்படுவதைத் தவிர, வேறென்ன எதிர்பார்க்கமுடியும், கனம் நீதிபதி அவர்களே!

வழக்கு எங்கள் ஐவர் மீதல்ல—திராவிடத்தின் மீது, வடநாட்டு ஆதிபத்யமும், இங்குள்ள வர்ணாஸ்ரம ஆதிபத்யமும், வழக்குத் தொடுத்திருக்கின்றன. திராவிடத்தைத் தனிநாடு ஆக்கும் முயற்சியும், திராவிடரை வகுப்பு-வர்க்க பேதமற்ற, முற்போக்குள்ள மக்களாக ஆக்குவதும், குற்றமாம் என்று கூறி, வழக்கு நடத்தப்படுகிறது. எங்கள் ஐவர் மீது தொடரப்படும் வழக்கு, திராவிட விடுதலைக் கிளர்ச்சிக்கு எதிராக நடத்தப்படும், பழிவாங்கும் திட்டத்தின் ஒரு பகுதியேயாகும். திராவிடம், விடுதலைபெற முயற்சிக்கிறது; அறிவுள்ள சமூக அமைப்பைப்பெற முயற்சிக்கிறது; சமதர்ம பொருளாதார முறையைக்காண முயற்சிக்கிறது—இந்த தூய திட்டத்தை அழித்திடும் நினைப்புக்கொண்ட ஆட்சி, எங்கள் ஐவரைக் கூண்டிலே நிறுத்தியிருக்கிறது. ஆனால், திராவிடத்தின் இலட்சக்கணக்கான இலட்சிய வீரர்களை, மறைக்க எண்ணுகிறது. இந்த வழக்கே போதும், உலகுக்குத் திராவிடத்தின் உண்மை நிலைமையை உணர்த்த! நாங்கள் இதற்குப்பயன்படும்தன்மைகண்டு, மகிழ்ச்சியே பிறக்கிறது. நாங்கள் குற்றவாளிகள் அல்ல, கனம் நீதிபதி அவர்களே! நாங்கள் குற்றவாளிகள் அல்ல! நாங்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையை நாடு ஆதரித்திருக்கிறது, நல்லோர்கள் துணை நின்றனர், கழகச் செயல் வீரர்கள், சொந்த வாழ்வைச் சிறிதென மதித்திடும் செம்மல்கள், சிறையிலே பூட்டப்பட்டிருக்கிறார்கள். நாள்தோறும் இலட்சக்கணக்கிலே கூடும் மக்களின், ஆதரவு ஆரவாரமும், உறுதி முழக்கமும், எமது செயலை நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது.

VOX POPULI
VOX DESII
THE VOICE OF THE PEOPLE
IS THE VOICE OF GOD

மக்கள் குரலே, மகேசன் குரல் என்பது அரசியல் பழமொழி மட்டுமல்ல, ஆட்சியாளர்களுக்கு இன்றியமையாத பாடம். அதனை மறந்து, எம்மைக் குற்றக் கூண்டிலே நிறுத்தி

பிருக்கிறார்கள். மக்களை மதிக்காத சர்க்கார் சாட்டும் குற்றச் சாட்டுகள், எம்மை, உலகுக்கு அறிவிக்கச் செய்யவே உதவும். ஆட்சியாளர்கள் செல்லும் பாதை எப்படிப்பட்டது என்பதையே நினைவூட்டுவதாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. திராவிட விடுதலை போருக்கான நெஞ்சு உரமும் நேர்மைத் திறனும் தரும் சம்பவமாகவே இது அமைகிறது. நாங்கள் குற்றவாளிகள் அல்ல; எமது தாயகத்தை, நமது தாயகத்தை மீட்கும் அறப்போரிலே ஈடுபட்டுப், பரிசுபெறும் முன்னணிப் படையினர். கோர்ட்டார் அவர்கள், நாங்கள் குற்றவாளிகள் என்ற முடிவுக்கு வந்து தண்டனை தரினும், களிப்புடன் ஏற்றுக்கொள்வோம். இந்த வழக்கும், தண்டனை தரப்படுவதானால், அதுவும் கூட, திராவிடத்தைத் தனி அரசு பெற. தரப்படும் வாய்ப்பு என்றே கருதிப், பூரிப்புடன் ஏற்றுக் கொள்வோம். விடுதலை சாமான்யமான சரக்கல்ல—தக்க விலைகொடுத்தே அதனைப்பெற முடியும், உயிரைத் தந்தனர் சிலர்! 'கண்ணை, காத்தை, காலைத் தந்தனர் பலர்' தியாகத் தழும்பு பெற்றனர் பலப்பலர் ...! வாழ்க அந்த வீரர்கள் என்று வாழ்த்தியபடியே தண்டனையை ஏற்றுக்கொண்டு, கடமையைச் செய்தோம் என்ற மனத்திருப்தி பெறுவேன்.

வணக்கம்.

சுவையற்ற பகுதி

—(0)—

" பிரகிருதிகளின் தோற்றங்களோடு மனித உணர்ச்சிகளைச் சம்மேளனப்படுத்திக் கவிதை இயற்றுவதைச் சுவையுடன் செய்யவேண்டும். தமிழின் பிற்கால இலக்கியங்களில், இந்த இயைபு சுவையோடு செய்யப்படவில்லை. கம்பநாட்டாழ்வாரே இவ் விஷயத்தில் பெருங் குற்றவாளி என்றால், மற்றோரைப்பற்றி வினவ வேண்டாம். கம்பராமாயணம் பால காண்டத்தின் ஆற்றுப்படலத்திலுள்ள விருத்தங்களில் அநேகமாய் எல்லாவற்றையும், இன்னும் அந்தக் காவியத்தில் இயற்கைப் பொருள்களை வர்ணிக்கும் விருத்தங்களிற் பெரும்பான்மையும் இந்தச் சுவையில்லாத இயைபுக்கு உதாரணமாகக் காட்டலாம்."

—வ. வே. சு. ஐயர்.

வேடிக்கை வினையாயிற்று

பழைய காலத்து மன்னன் ஒருவன், தன் அத்தாணி மண்டபத்தில், தனக்குப் பக்கத் துணையாக வைத்திருந்த பலரில் விகட கவி ஒருவனுவான். அவனுடைய வேலை நகைச்சுவைப் பேச்சுக்களைப் பேசி, அரசனையும், அவனது விருந்தினரையும் அவ்வப்போது களிப்படையச் செய்ய வேண்டியதாகும். அவன் பைத்தியக்காரனைப்போல் பேசும் பேச்சுக்கள், அத்தாணி மண்டபத்திலுள்ளவர்களால் பெரிதும் மகிழப் பட்டுவந்தன. விகடகவி பேசுகிற பேச்சுக்கு ஒரு வரைமுறை விதிக்கப்படாமல் முழு உரிமையும் அளிக்கப்பட்டிருந்தது. அந்த உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, அமைச்சர், படைத்தலைவர் முதலாயினோரின் பண்புகளிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, நகைச்சுவை உண்டாக்குவது அவனது வழக்கம். இந்த வகையில் அரசனுடைய குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட அவன் தவறுவதில்லை. ஒரு நாள் அவன் கூறிய கூற்று ஒன்று, வரைமுறை முழுவதையும் கடந்ததாயும், அரசனைப் பெரிதும் பாதிப்பதாயும் இருந்ததால், அரசனுக்குச் சினம் பொங்கி எழுந்தது. உடனே அரசன் விகடகவிக்குக் கொலைத் தண்டனை விதித்தான்; ஆனால் கடைசியாக விகடகவிக்குக் காட்டக்கூடிய அருளின் அறிகுறியாக, அவன் எப்படிப்பட்ட சாவு தனக்கு வேண்டும் என்று விரும்புகிறானோ, அதனைக் குறிப்பிடலாம் என்று அரசன் அனுமதி அளித்தான். அவன் அரசனுக்கு முன் தலைவணங்கி நின்று, "அரசே! என் சாவுபற்றித் தீர்மானிக்கும் வாய்ப்பை எனக்கே விட்டுவிட்டதால், தங்களுக்குச் சரி எனப்பட்டால், நான் வயது முதிர்ந்த நிலையில் சாகிறேன்" என்று பதிலுரைத்தானாம். விகடகவி, தான் சொல்லுகிற பதில் தன் உயிரையும் காப்பாற்ற வேண்டும், அரசனுடைய கட்டளையையும் நிறைவேற்றக் கூடியதாக இருக்க வேண்டும் என்று கருதி, தன்னுடைய விகடம் பேசும் திறமையினால் பதிலிறுத்தான்; விகடகவியின் பதில் அரசனுக்கு வியப்பை ஊட்டியது. அரசன் அந்த வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்ததைத் தவிர, வேறு வழி காணமுடியவில்லை; விகடகவி உயிர் தப்பினான் வேடிக்கைப் பேச்சு பேசும் போது, வேதனைதரும் சொல்லைக் கூறக்கூடாது என்ற படிப்பினையை, அந்த நிகழ்ச்சியின் மூலம் விகடகவி உணர்ந்து கொண்டான்.

புனைபெயர் பெற்ற புகழுடை இடங்கள்

——[O(o)O]——

முத்துக்களின் தீவு (Island of Pearls) - பக்ரெயின் (பர்சிய வளைகுடா)

உலகின் தனித்த தீவு (world's lovliest island) - டிரிஸ்டன் டி குன்ஹா (அட்லாண்டிக்மாக்கடலின் நடுவில்)

உலகின் கூரை (Roof of the world) - பாமீர் பீடபூமி

ஆதியந்தமில்லா நகர் (Eternal City) - ரோம்

நைல் நதியின் நன்கொடை (Gift of the Nile) - எகிப்து

நள்ளிரவு ஞாயிறு நாடு (Land of the Midnight Sun) - நார்வே

காலை அமைதி நாடு (Land of Morning Calm) - கொரியா

புனிதநாடு (Holy Land) - பாலஸ்தீன்

வெள்ளை யானை நாடு (Land of White Elephant) - சயாம்

பேரரசு நகர் (Empire City) - நியூயார்க்

ஹர்குலீஸ் தூண்கள் (Pillars of Hercules) - ஜிப்ரால்டர் பாறைகள்

மத்தியதரைக் கடலின் சாவி (Key of the Mediterranean) - ஜிப்ரால்டர்

செக்கச் சிவந்த ரோசா நகர் (Rose - Pink City) - ஜெய்ப்பூர்

வெள்ளையனின் கல்லறை (Whiteman's grave) - கினியாவின் கடற்கரை (ஆப்பிரிக்காவில்)

உலகின் சர்க்கரைத் தொட்டி (Sugar bowl of the world) - கியூபா

காற்றுடை நகர் (Windy City) - சிகாகோ

நீலமலைகள் (Blue Mountains) - நீலகிரிக் குன்றுகள்

சீனாவின் வருத்தம் (China's Sorrow) - ஹோயாங்கோ நதி

கண்ணீர்த் துளிகள் வாயில் (Gate of tears) - பாப் - எல் - மான்டெப் மலைக்குடைவு

இணைப்புப் பாலம் (The Corridor) - ஜெர்மனியையும் கிழக்குப் பிரஷ்யாவையும் பிரிக்கும், போலந்திலிருக்கும் ஒருதுண்டு நிலம்.

கருங்கல் நகர் (Granite City) - அபெர்டீன்

ஐரோப்பாவின் விளையாட்டுக் கூடம் (Playground of Europe) - ஸ்விட்ஜர்லாந்து

ஏழுமலை நகர் (City of Seven Hills) - ரோம்

எழு ஞாயிற்றின் நாடு (Land of Rising Sun) - ஜப்பான்

இருண்ட கண்டம் (Dark Continent) - ஆப்பிரிக்கா

மாணிக்கத் தீவு (Emerald Isle) - அயர்லாந்து

பஞ்ச நதித்திரம் (Land of Five Rivers) - பஞ்சாப்

இந்தியாவின் வாயில்வழி (Gateway of India) - பம்பாய்

அரண்மனை நகரம் (City of Palaces) - கல்கத்தா

பொன்னிறக் கம்பளி நாடு (Land of golden Fleece) - ஆஸ்திரேலியா

வானைத் தொடும் கட்டிட நகர் (City of Sky - Scrapers) - நியூயார்க்

ஐரோப்பாவின் கோழிக் குழி (Cockpit of Europe) - பால்கன் நாடுகள்

ஆயிரத் தீவு நாடு (Land of Thousand Islands) - பின்லாந்து

நெடுந் தொலைவுடை நகர் (City of Magnificent Distances) - வாஷிங்டன்

வங்கத்தின் வருத்தம் (Bengal's sorrow) - தாமோதர்

யாரும் அற்ற நாடு (Never Never Land) - வட ஆஸ்திரேலியாவின் பரந்த புல்வெளி

அட்ரெய்டிக்கின் ராணி (Queen of the Adraitic) - வெனிஸ்

தென்னாட்டு நெற்களஞ்சியம் (Granary of South India) - தஞ்சை மாவட்டம்

வேழநாடு (Land of Elephants) - சேர நாடு

முத்துநாடு (Land of Pearls) - தென்பாண்டிநாடு

மிளகுநாடு (Land of Pepper)- திராவிடம்

தாய்மையும், குழந்தைநலப் பாதுகாப்பும்

★ [டாக்டர்] ★

10

தாய்ப்பால் குழந்தைக்குப் போதுமான அளவு கொடுக்கப்படுகின்றதா என்பதை அறிந்து கொள்வதெப்படி?

(1) தாய்ப்பால் போதுமான அளவில் இருந்தால், குழந்தை உற்சாகமுடன் சுறுசுறுப்பாகக் கை கால்களை அசைத்து உதைத்து விளையாடும்.

(2) நாளுக்கு நாள் குழந்தையின் எடை நிதானமான முறையில் அதிகரிக்கும்.

(3) வாந்தி, வயிற்றுவலி முதலியன ஏற்படா.

(4) நன்றாக நீண்ட நேரம் தூங்கும்.

ஆனால் பால் குறைவாகக் கொடுக்கப்பட்டால் (Under feeding) குழந்தையின் எடை அதிகரிக்காது. மலச்சிக்கல் ஏற்படும். சில குழந்தைகள் அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாகப் பச்சை நிறமாக மலம் கழிக்கும். இரவும் பகலும் ஓயாமல் அழுதுகொண்டே இருக்கும். தாய்ப்பால் குறைவாக இருப்பதால், அதிகமாகக் காற்று உட்கொள்ளுகின்றது. அதனால் குடித்த கொஞ்ச பாலையும் வாந்தி எடுத்து விடுகின்றது.

தாய்ப்பால் குறைவாகக் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளும் விதம்:—

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு நாளுக்குத் தாய்ப்பால், அதன் ஒவ்வொரு பவுண்டு எடைக்கும் இரண்டரை அல்லது மூன்று அவுன்ஸ் தேவைப்படுகின்றது. ஆகையால் 7 பவுண்டு எடையுள்ள குழந்தை ஒன்றுக்கு ஒரு நாளைக்கு (ஏழு இரண்டரை—பதினேழரை அதாவது) 18 அவுன்ஸ் பால் தேவை. ஆகையால் 6 வேளைகள் பால் கொடுக்கப்படுவதால் ஒரு வேளைக்கு (18/6) 3 அவுன்ஸ் பால் தேவைப்படுகின்றது. இதைத் தாய்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைக்குப் பால் குறைவாகக் கொடுக்கப்படுகின்றதா, அல்லது தேவையான அளவு கொடுக்கப்படுகின்றதா, என்று அறிந்து கொள்ள, குழந்தையைப் பால் குடிக்கு முன்னரும், குடித்து முடித்த உடனேயும், (அதே துணிகளுடன்) எடை போட வேண்டும். அந்த எடையிலுள்ள வித்தியாசம் குழந்தைக்குக் கொடுக்கப்பட்ட தாய்ப்பாலின் அளவைக் காண்பிக்கின்றது. (இதற்கு Test feeds என்று பெயர்) இதிலிருந்து மேலே சொன்னபடி 7 பவுண்டு எடையுள்ள குழந்தைக்கு, ஒரு வேளைக்குத் தேவையான 3 அவுன்ஸ் தாய்ப்பால் கிடைக்கின்றதா என்று தெரியும். (6 வேளைகளும் மேலே சொன்னபடி குழந்தையை பால் குடிக்கு முன்னரும், குடித்த பின்னரும் நிறுத்துச் சராசரி வித்தியாசம் கண்டு பிடிப்பது நல்லது.)

இங்ஙனம் கணக்கிட்டு ஒரு வேளைக்குக் குழந்தைக்குத் தாய்ப்பால் ஒன்றரை அவுன்ஸ் தான் கிடைக்கிறது என்று கண்டுபிடித்தால், அதற்கு அந்த வேளைக்குத் தேவையான மற்ற ஒன்றரை அவுன்ஸ் உணவைத் தாய்ப்பால் கொடுத்த பின்னர், பசும்பாலைக் கொண்டோ, அல்லது "பால் மாவு"களின் உதவியைக் கொண்டோ கொடுக்கவேண்டும். (இதற்கு Complementary feeds என்று பெயர்) இப்படித் தாய்ப்பாலுக்குப் பின் தேவையைப் பூர்த்திசெய்யப் பசும்பாலைக் கொடுத்துவிட்டால், குழந்தை திருப்திகரமாக வளரும்.

தாய்ப்பால் குழந்தைக்குத் தேவையான அளவில் பாதிக்குமேல் குறைவாக இருந்தால், தாய்ப்பாலுக்குப் பதிலாக இரண்டொரு வேளை (தாய்ப்பாலே கொடுக்காமல்) பசும்பாலோ அல்லது வேறு உணவோ கொடுக்கவேண்டும். இதற்கு Supplementary feeds என்று பெயர்.

தேவைக்கு மேல் அதிகமாகப் பால் கொடுத்தால். (Over feeding)—(1) குழந்தைக்கு அடிக்கடி பேதியாகும். அதனால் குழந்தையின் ஆசனம் சிவந்து புண்ணாகிவிடும்.

(2) பால் குடித்தவுடன் ஒவ்வொரு முறையும் அடிக்கடிக் கொஞ்சங் கொஞ்சமாக வாந்தி எடுத்துக் கொண்டே இருக்கும்.

(3) வயிற்றுவலி, தூக்கமின்மை, அமைதியின்மை ஏற்படும்.

(4) முதலில் எடை அதிகமாக அதிகரிக்கும். ஆனால் வாந்தி, பேதியின் காரணமாகப் போகப் போக எடை குறைந்து ஒரே அளவில் இருக்கும்.

அடிக்கடி பால் கொடுப்பதாலும், நீண்ட நேரம் பால் கொடுப்பதாலும் இந்தத்தவறு ஏற்படுகின்றது.

நம்நாட்டில் 'மாசிக்காய்', 'பிள்ளை வளத்தி', 'வசம்பு' என்ற பலவித சரக்குகளை, உரைத்தும், சுட்டும் பாலில் கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். வேறு சிலர், குயவனிடமிருந்து மாத்திரையும், மலையாள வைத்தியனிடமிருந்து 'மாந்த' எண்ணெயும், மற்றும் சிலர் நாள் தவறாமல் விளக்கெண்ணெயும், படித்த சிலர் 'Gripe water'ம் குழந்தைக்குக் கொடுப்பதோடு இவைகளைக் குழந்தைக்கேற்ற சிறந்த டானிக்குகளாகவும் கருதுகிறார்கள். இந்த "டானிக்குகளை" மீறி, குழந்தைக்கு அதிகப்படியாக வாந்தியும், பேதியும் இருந்தால், "மசூதி"க்குச் சென்று, 'மாந்த்ரீகத்தை'க் கையாண்டு, குழந்தைக்குக் "குளிச்சமும்", 'முடிக்கயிறும்' கட்டுகிறார்கள். தங்களுக்குத் தெரிந்த இந்த முறைகளெல்லாம் பயனளிக்கா விட்டால், குழந்தையைத் 'தோஷம்' மிகவும் பயங்கரமாகத் தாக்கிவிட்டது என்று கருதி, குழந்தை இறந்தாலும் வாளா இருக்கிறார்கள். ஒரு சிலர் எதற்கும் 'டாக்டரிடம்' காண்பிப்போம் என்று கடைசி நேரத்தில் டாக்டரிடம் செல்லுகிறார்கள். மக்களின் அறியாமையை என்னவென்று சொல்லுவது!

குழந்தைக்குப் பால் கொடுக்கும் முறையிலும், அளவிலும் உள்ள தவறுகளை உணராமல், (Faulty technique of infant feeding) மூடப்பழக்க வழக்கங்களைக் கையாண்டு, குழந்தைகளைப் பலியாக்கும் தாய்மார்கள் இம்முறைகளை நன்கு அறிந்து இருந்த வேண்டும். குழந்தைக்கு வயிற்றுக் கோளாறு இருந்தால் உங்கள் டாக்டரிடம் முதலிலேயே குழந்தையை எடுத்துச் செல்லுங்கள் — அல்லது அருகேயுள்ள "தாய்மை குழந்தைநலப் பாதுகாப்பு" நிலையங்களுக்குக் குழந்தையை வாரா வாரம் எடுத்துக் கொண்டு போய் அங்குள்ள டாக்டர்கள் சொல்லுகிறபடி குழந்தையைப் பராமரியுங்கள். குழந்தைமரணத்தின் முக்கிய காரணம் நம் நாட்டில் வயிற்றுக் கோளாறு தான் என்பதை உணருங்கள்.

11

தாய்ப்பால் கொடுப்பதில் உள்ள கஷ்டங்கள்:—

குழந்தைக்கு தாய்ப்பால் நன்றாகக் கொடுக்க முடியாமல் போவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவை,

(1) குழந்தையிடம் காணப்படும் சில குறைபாடுகள்.

(2) தாயினிடம் காணப்படும் குறைபாடுகள்

குழந்தையிடம் காணப்படும் தவறுகளும் குறைபாடுகளும்:—

(1) குழந்தைக்குச் சளி பிடித்துக்கொண்டு மூக்கில் அடைப்பு இருந்தால், தாயிடம் பால் குடிக்க முடியாமல் திணறும். ஆகையால் பால் கொடுக்கு முன்னர், குழந்தையின் மூக்கைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும்.

(2) குழந்தையின் வாய் புண்ணாகி இருந்தால் (Thrush), குழந்தைக்குத் தாயிடம் பால் குடிக்க முடியாது. அப்பொழுது முலைப் பாலை ஒரு கரண்டியில் பிழிந்து குழந்தைக்கு கொடுக்க வேண்டும். (வாய்ப்புண்ணை டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்)

(3) பிறவியிலேயே உதட்டில் பிளவு (Hare-lip) அல்லது வாயின் மேல் பாகத்தில் பிளவு (Cleft palate) இருந்தால் குழந்தையால் பால் சப்ப முடியாது. பாலைப் பிழிந்து தான் கொடுக்கவேண்டும். மூன்று மாதங்களுக்குப் பிறகு, ரணசிகிச்சை செய்தால் இந்தக் குறைபாடு நீங்கும்.

(4) குறை மாதத்தில் பிறந்த குழந்தைகள் (Premature) மிகவும் பலஹீனமாக இருக்கும் காரணத்தால் தாய்ப்பால் நன்றாகச் சப்ப முடியாது.

தாயினிடம் காணப்படும் குறைபாடுகள்:—

(1) சரியாக வளர்ச்சி பெறாத முலைகள்.

(2) முலைக்காம்புகள் நன்றாக அமையப் பெறாமல் இருத்தல்.

(3) முலைக்காம்புகளில் வெடிப்பு, புண் முதலியன இருத்தல்.

(4) முலையில் 'கட்டி' ஏற்படுதல் (Breast abscess)

(5) தாய்க்கு 'நியுமோனியா', 'டைபாய்டு' போன்ற மற்ற உடம்பு அசௌகரியங்கள் ஏற்படுதல்.

காதற் காட்சிகள்

அறிவிலும், ஆற்றலிலும், அழகிலும் சிறந்த ஆண்மகன்; கண்டார் உள்ளங் கவரும் கட்டிளங்காளைப் பருவத்தினனாகக் காட்சியளிக்கிறான். இயற்கை தரும் எழிற்காட்சிகளையெல்லாம் காணுவதன் மூலம் பொழுது போக்கலாம் எனக் கருதிப் பூம்பொழில் நோக்கிச் செல்கிறான்.

தோகை மயிலென இரண்டு பெண்ணணங்குகள்; சிரித்துப்பேசி, ஆடிப்பாடிப் பூம்பொழிலில் உலாவி வருகிறார்கள். தோற்றப் பொலிவாலும், பேச்சுப் போக்காலும் ஒருத்திக் தலைவியாகத் தென்படுகிறாள்; மற்றொருத்தி எல்லா வகையாலும் அவளுக்கு உற்ற தோழியாகக் காணப்படுகிறாள்.

பெண்களின் சிரிப்பொலி, மலர்ச் செடிகளுக்கிடையே இருந்து எழும்புகிறது. சிரிப்பொலி கேட்கும் பக்கம் செவி சாய்த்து நிற்கிறான். சிரிப்பொலியோடு வளையலொலியும் இணைந்து வருகின்றது. வியப்புணர்ச்சியால் செவிசாய்த்து நின்றதோடு நில்லாமல், கண் பார்வையையும் செலுத்தத் தொடங்குகிறான். அடர்ந்து கிடக்கு கொடிகளையும், செடிகளையும் நீக்கிக்கொண்டு ஒலிகள் வந்த இடம் நோக்கி மெல்ல நுழைகிறான். பெண்ணழகிகள் இருவர் பேசி மகிழ்வதைக் காண்கிறான். முகப்பொலிவோடு சாயல்காட்டி நிற்கும் தலைவியைக் காண்கிறான்; மெய்ம்மறந்து உளம் மகிழ்ந்து நிற்கிறான்.

அவ்வாணழகன் அத்தலைவியையும், தோழியையும் அதற்கு முன் பல இடங்களிலும், பல முறையும் கண்டிருக்கிறான். அவர்களும் அவனைக் கண்டிருக்கிறார்கள். தலைவியைக் காணும் போதெல்லாம் அவனையும் அறியாமல் அவள் சாயல் கண்டு, மையல் கொண்டு அவன் நிற்பதுண்டு. அவளும் உளம் நெகிழ்ந்த உணர்வோடு தன்னை அடிக்கடி உற்று நோக்கும் அவனைக் காண்பதுண்டு. அவன் விழித்தகண் அசையாமல் அவளை நோக்குவான்; அப்படித் தன்னை நோக்குபவனைத் திரும்பத்திரும்பப் பார்த்து மகிழ வேண்டும் என்ற ஆவல் அவளுக்கும் ஏற்படுவதுண்டு. ஆனால் நாணம் அவளைத் தடுக்க, ஏதும் அறியாதவள் போலச்சென்று விடுவது வழக்கம். இப்படிப்பட்ட நிலையில், பூம்பொழிலில், தோழியோடு அவளைத் தனியே காணும் வாய்ப்பு ஏற்பட்டதைப் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறான் அத்தலைமகன்.

அங்கு பூஞ்செடியொன்றிலுள்ள மலரைப் பறிக்கத் தோழி வருகிறாள். தலைவன் இது தான் சமயம் என்று கருதி, அவள் முன் சென்று வணக்கங்கூறி நிற்கிறான். தோழி திகைத்து அஞ்சின குரலில் வணக்கம் சொல்லி, மேற் செல்லலாமா நிற்கலாமா என்று ஊசலாடிக்கொண்டிருக்கிறாள். அவன் "பெண்ணே!" என்று விளித்து. "அந்த அணங்கு இருக்கிறாளே, அவள்...." என்று மொழிந்து, மேற்கொண்டு ஏதோ சொல்லத்தொடங்கி, ஏதுஞ் சொல்ல மாட்டாதவனாக ஏங்கி நிற்கிறான். அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கூர்ந்து கேட்க, அவனை உற்று நோக்கிய வண்ணம் இருக்கிறாள் தோழி. அவனோ வெட்கப்பட்ட இளித்தவாயனாகக் கைகளைப் பிசைந்து கொண்டு, அவளைப் பார்ப்பதும், தலையைத் தாழ்த்திக் கொள்வதும், மீண்டும் நிமிர்ந்து அவளைப் பார்ப்பதும், மீண்டும் தலையிறங்கப் போட்டுக் கொள்வதும், ஆன நிலையில் நின்றுகொண்டிருக்கிறான். தோழிக்கு அவன் என்ன காரணமாகத் தடுமாற்ற நிலையில் நிற்கிறான் என்பது நன்றாகப் புரிகிறது. என்றாலும் அவனிடத்தில் தான் என்ன கூறுவது என்பது அவளுக்குப் புலப்படவில்லை. வேறொன்றும் தோன்றாதவளாய்த் தலைவி இருக்கும் இடத்திற்கு ஓரே ஓட்டமாக ஓடி விடுகிறாள்.

தலைவியினிடத்தில், சிரிப்புக் தாங்கமாட்டாமல், தோழி, "ஏடி!........இங்கே நின்றுகொண்டிருக்கும் ஒருவன் என்னமோ கேட்கிறானடி!....என்ன கேட்கிறான் என்றே புரியவில்லை!....இவனுடைய கேடுகெட்ட நிலையை நீயே பாரேன்!....நினைத்தால் ஓரே சிரிப்பாக வருகிறது!....செல்வமெல்லாம் இழந்து வறுமையை அடைந்துள்ள அறிவுடையோர், தம்முடைய வறுமைத் துன்பத்தை போக்கக்கூடிய

உறவினர்களிடத்திலே சென்று, தம்முடைய குறையை வாய்விட்டுச் சொல்லத் தொடங்கிப், பிறகு அதனை முழுவதும் முடிய சொல்ல முடியாமல் திணறுவதைப் போல, இவனும் தான் சொல்லக் கருதியதை விட்டுவிட்டு, என்னைப் பலமுறைத் திரும்பத் திரும்பப்பார்க்கிறான்; இவன் என்ன சொல்லப் போகிறானோ என்று கூர்ந்து நோக்கினால், மெதுவாகத் தலையைக் கவிழ்த்துக் கொள்கிறான்...'' என்று கூறிக்கொண்டிருக்கிறாள்.

தோழி ஓடி வந்தவுடன், தலைவனும் அவளைப்பின் தொடர்ந்து வந்து, அவள் பின்னாலே சிறிது தொலைவில் நிற்கிறான். தோழி திரும்பிப் பார்க்கிறாள்; அவன் தன்னை எதிர்பார்த்து நிற்பதை அறிந்து கொள்கிறாள். அவனோடு பேச்சுக் கொடுப்பது, அவளுக்கு வேடிக்கையான ஒன்றாகப் போய்விட்டது. உடன் அவன் நிற்கும் இடம் நோக்கி வருகிறாள். அவனைப் பார்த்து, ''ஏடா!.... நீ என்ன, உன்னை விட்டு நீங்காத நிழல்போல் என்னைப் பின் தொடர்ந்து வந்து சுற்றித் திரிந்தவண்ணம் இருக்கிறாய்?...இதைப் பார்க்கும் போது நீ எங்களோடு நட்புக் கொள்ள விரும்புவதைக் குறிப்பாலே அறிவிப்பவன்போல் இருக்கிறாய்!...உனக்கு என்ன குறை? உன் குறைதான் இதுவென்று கூறுபார்க்கலாம்!....'' என்று கேட்கிறாள்.

அதுகேட்ட அவன் தன் மனதிற்குள்ளேயே, ''நான் என்னுடைய குறை இது என்று சொன்னால், அவள் அதனை மறுக்காது நிறைவேற்றி வைப்பாளோ?....'' என்று ஐயப்பட்டுக் கொண்டு, அப்படியே வாய் விட்டுக்கேட்கிறான் தோழியை. ''தம்மிடத்தில் ஏதேனும் ஒன்றை இரந்து வேண்டுவோர்க்கு முகங்கோணாது கொடுத்தலைச் செய்யக் கூடியவர்களா நீங்கள்? அங்ஙனம் இல்லையாயின், என்னுடைய உயிர் நிலைத்து வாழாமல் சாதலை அடைந்தாலும் அடையக்கூடும். நீ என்ன சொல்கிறாய்?....'' என்று மேலும் கேட்கிறான்.

காதல் இல்லையேல் சாதல் என்ற உணர்வோடு ஏங்கி நிற்கும் தலைவனைக் கண்ட தோழி அவனது இரங்கத்தக்க நிலைக்காகப் பரிவு காட்டி, ''இவளது தந்தை இரப்பவரிடத்து மிகவும் அன்பு காட்டும் தன்மையர். இரப்போர்க்கு நல்ல நல்ல உயர்ந்த பொருள்களைக் கொடுப்பது அவரது வழக்கம். உனக்கு என்ன பொருள் வேண்டும். அதனை இன்னதென்று கூறு'' என்று அன்பும் கேலியும் கலந்த குரலில் கேட்கிறாள்.

அது கேட்டத் தலைவன், தோழியின் கேலி மொழியால் சிறிது சினமுறுகிறான். என்றாலும் தன்னைத்தானே தணித்துக் கொண்டு, தோழியைப் பார்த்துக் கூறுகிறான், ''நான் சொல்லும் சொல்லின் குறிப்பை அறிந்து கொள்ள மாட்டாதவளாய் இருக்கிறாய். பிறரிடத்துப் பொருளைக் கெஞ்சிக் கேட்டு இரக்கும் அளவுக்கு என்னிடத்தில் வறுமையில்லை. மடப்பத்தோடு கூடிய நோக்கோடு பார்க்கிறாளே ஒருத்தி, உன் தலைவி, அவள் என்னை அருள் செய்ய வேண்டும் என்பதைத்தான் நான் இரக்கிறேன்'' என்று கூறுகிறான்.

''அதுவா உன்னுடைய குறை?''....என்றசை சொல்லி சிரித்துக் கொண்டே தலைவி நிற்குமிடம் நெருங்குகிறாள்.

''போர்க்களத்திலே பகைவர்களைக் கொன்று குவித்துவிட்டு மீளும் யானை போன்ற ஒரு ஆண் மகனைப், பெண்மகள் ஒருத்தி அருள் செய்யும்படியாக, அவனிடத்து என்ன குறையுடை இருக்கக்கூடும்?''....என்று தெரியாதவள் போல், கேலிக்குரலால் தோழி தலைவியைக் கேட்கிறாள்.

தலைவி, தோழியின் கையைப்பிடித்துக் கொண்டு, அவளது வளையல்களை மேலும் கீழும் தள்ளிக்கொண்டே தோழிக்குச் சில சொல்கிறாள். ''ஏடி!...இவனைப் பார்த்தால், என்னுடைய தந்தையின் மனம் கோணாதவாறு ஏதேனும் விருப்பமுடையதைக் கொடுத்தும், விருப்பமுடையதைச் சொல்லியும் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளாமல் போகமாட்டான் என்றே நினைக்கிறேனடி!....இவனுடைய பண்பு அப்படிப்பட்டதாக எனக்குப் படுகிறது. அதனால் நீ அவனுக்கு என் சார்பாக அருளுதலைச் செய்தால் கூட நமக்கு ஒரு குறைவும் ஏற்பட்டு விடாது என்று கருதுகிறேன்; பார்த்தால் அவன் அவ்வளவு இரங்கத்தக்கவனாக இருக்கிறான். அவன் என்னுடைய காதலன்பு வேண்டி நிற்கும்பொழுது, நான் அவன் நிலையை இகழ்ந்து சிரித்துக் காட்டினாலும், நான் இகழ்கிறேன் என்பதை உணராமல், அவனிடத்தில் காதலன்பு செலுத்துவதால்தான் நான்

சிரிக்கிறேன் என்று கருதிக்கொண்டு அடிக்கடி வந்துவந்து போகிறான். தன்னுடைய குறையைப் போக்கிக்கொள்ளவேண்டி, என்னை நோக்கி நிற்கும் போதெல்லாம், கள்வர் தாம் குறித்த பொருளைப் பார்க்காமல்பார்த்துக் கொள்வது போல, இவனும் இடையிடையே என்னைப் பார்க்காமல்பார்த்துக் கொண்டேயிருக்கிறான். ஏஎ!....எனக்கு நினைத்தாலே சிரிப்பு வருகிறது. என்ன ஒரு பெண்ணை அடிக்கடி உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறோமே என்பதில் இவனுக்குச் சிறிது கூட வெட்கம் ஏற்படவில்லை. வெட்கத்தைச் சிறிது கூட இவன் பொருட்படுத்தாமல் இருப்பதால், இவன் போகின்ற போக்கு ஊரார் சிரிக்கும்படி ஆகிவிடும்போலிருக்கிறது. நாம் இவனுக்கு அருள் செய்யாமலிருந்தால், என்னோடு அவனிடை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஊராரிடத்தே பாவி வதந்திகள் பல கிளம்பட்டும் என்று கருதி, மடலேறவான் போலே தெரிகிறது" என்று சொல்லி, ஊரார் அலருக்கு அஞ்சுவது போல் காட்டிக் கொள்கிறாள்.

அதுகேட்ட தோழி "ஊராரின் அலர் தோன்றாமலிருக்க வேண்டுமாயின், நீ இவன் பால் அருள் காட்டி இவனது குறையைப் போக்கத் தக்கது செய்யவேண்டும். அவ்வளவுதான்!...." என்கிறாள். தலைவி புன்முறுவல் காட்டித் தலைவனை மணம் செய்துகொள்ள இசைவாள்போல் குறிப்பு உணர்த்துகிறாள். தலைமகன் மகிழ்கிறான்.

*　　　*　　　*

குறிஞ்சிக்கலியின் 25-வது செய்யுளில் வந்துள்ள கருத்தே, பொருத்தமுறமேலே கொடுக்கப்பட்டிருப்பதாகும். ஒரு பெண்ணினிடம் காதல் கொண்ட ஒரு இளைஞன், அவளைப் பலகாலும் பார்த்து, அவள் குறிப்பறிந்து, தோழியின் மூலம் தன் உள்ளக்கிடக்கையைத் தலைவிக்கு உணர்த்தி, தலைவியின் இசைவைப் பெற அரும்பாடுபட்டு, இறுதியில் இசைவைப் பெறுவது என்ற காதல் நிகழ்ச்சி, எத்துணை அழகாகப் பண்டை நாட்களில் உணர்த்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை இச்செய்யுளின் மூலம் இனிது அறிந்து மகிழலாம். இத்தகைய காதற் காட்சியின் கட்டங்கள் இன்றைய உலகியல் வாழ்வோடும் மிகவும் பொருந்தி வருகிற தன்மையை, எண்ணிடும் போதெல்லாம் உள்ளத்தில் இன்ப உணர்வு ஊற்றெடுத்து ஓடுவதைக் காணலாம்.

*　　　*　　　*

எல்லா இஃதொத்தன் என்பெறான்
　　　　　　　　　கேட்டைக்காண்
செல்வங் கடைகொளச் சாஅய்ச் சான்றவர்
அல்லல் களைதக்க கேளிர் உழைச்சென்று

சொல்லுத லுற்றுரைக் கல்லா தவர்போலப்
பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற்று
மெல்ல விறைஞ்சுந் தலை;　　　[யானோக்கின்

எல்லாநீ முள்ளத்தா னென்று குறித்தாய்
　　　　　　　　　போற்காட்டினை
நின்னின் விடாஅ நிழற்போல் திரிதருவாய்
என்னீ பெறாததீ தென்;

சொல்லின், மறாதீவாள் மன்னோ விவள்;
செறாஅது, ஈத லிரந்தார்க்கொன் றாற்றாது
சாதலுங் கூடுமா மற்று;　　　[வாழ்தலிற்

இவள்தந்தை, காதலின் யார்க்குங் கொடுக்கும்
யாதுநீ வேண்டி யது;　　　[விழுப்பொருள்

பேதாய், பொருள்வேண்டும் புன்கண்மை
　　　　　　　　　யீண்டில்லை யாழ

மருளி மடநோக்கி னின்றோழி யென்னை
அருளீயல் வேண்டுவல் யான்;

அன்னையோ, மண்டமாட்ட களிறன்னான்
　　　　　　　　　தன்னையொரு
பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ;

ஒண்டொடீ, நாணிலன் மன்ற விவன்;

ஆயின் ஏஎ,

பல்லார்நக் கெள்ளப் படுமடல் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுதல்

நல்காள்கண் மாறிவிடினெனச் செல்வானும்
எள்ளி நகினும் வருஉ மிடையிடைக்
கள்வர்போல் நோக்கினு நோக்குங் குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடைய
உள்ளங் குறைபடா வாறு　　　[னெந்தைதன்
　　　　　　　　　—(குறிஞ்சிக்கலி 25)

[ஒத்தன்-ஒருத்தன்; கடைகொளச் சாய்ச்-முடிவை அடைதலினால்; சான்றவர் - அறிவுடையோர்; அல்லல் - துன்பம்; கேளிர் - உறவினர்; உழை - இடத்து; பல்லூழ் - பலதடவை; இறைஞ்சும் - தாழும்; ஈதென் – இது வென்று சொல்லு; மறாதீவாள் மன்னோ – மறுக்காது ஈவாளோ; விழுப்

காடு

★

கவிஞர் வாணிதாசன்

★

குளத்தினைத் தாண்டி மேற்கில்
கூப்பிடு தொலைவி லுள்ள
களத்தினைக் கண்டேன்; அங்கும்
அமைதியைக் கண்டேன் இல்லை!
வளத்தினைப் பெருக்கும் குன்று
மலைகளுக் கருகிருந்தேன்
உளத்தினைக் கவர்ந்த காட்டைக்
கண்டேன் நான் உவகை கொண்
[டேன்!

முட்புதர் நெருஞ்சி கள்ளி
முன்னரண்; ஒற்றைப் பாட்டை
உட்புகும் வாயில்; தூண்கள்
உயர்மரம்; அம்ம ரத்துக்
கொத்துப்பூ காற்றி லாடும்
கொடிகளாம்; வெய்யோன் திங்கள்
உட்புக வொண்ணாத் தூய
மரகதக் கோட்டை காடே!

சீழ்க்கையை அடித்த டித்தே
அழைத்தது மஞ்சட் சிட்டு!
நோக்கின கண்கள்; கோட்டு
நுனியெலாம் புள்ளின் கூடு!
காக்கைகள் தங்கள் கூண்டில்
கால்வைத்த குயிலைச் சேர்ந்து
தாக்கின; இனப்போர் கண்டேன்;
தமிழக முன்னாள் கண்டேன்!

முதலையின் உடல்வுண் ணம்போல்
முதிர்மரப் பட்டை; கள்ளிப்
புதரெலாம் பிரண்டைப் போர்வை!
புரையோடிச் செறித்த ஆலின்
முதலினை அரிக்கும் செல்லோ,
முழுவர கரிசி! தாங்கும்
மதலைகள் விழுது! செம்பு
மரகதக் கோவைச் செங்காய்!

பொன்மணிக் கோர்வை கொன்றைப்
பூங்கொத்தாம்! அக்கொத் தின்கீழ்
முன்னீண்டு தொங்கும் காய்கள்
குரங்கின்வால்! குமட்டி முன்னர்
பொன்செய்யும் கொல்லன் ஊதாங்
குழலெனில் பொருந்தும்! காட்டுப்
பன்மலர் மொய்க்கும் வண்டோ
கருநாவற் பழமே தம்பி!

தழையெலாம் உதிர்ந்த மொட்டைத்
தனிமரம் அருகில் என்னை
அழைத்தது; சென்றேன்;
"சிற்றூர்
அணிநகர் மாடம் கூடம்
தழைத்திடச் செய்தோர்; செத்தும்
தடங்கடல் காற்றெ திர்த்தோம்
உழைப்பவர்க் குயர்வேன் இல்லை?"
என்றதே! விழிப்புத் தேவை!!

பொருள் - சிறந்தபொருள்; பேதாய் - குறிப்பறியாதவளே; புன்கண்மை - வறுமை; அருளீயல் - அருளுதலை; வேண்டுவல் - இரப்பேன்; மண்டு அமர் - மிக்குப்போரிடுகின்றபோர்; களிறு - யானை; நாண் - வெட்கம்; நக்கு - சிரித்து; எள்ளப்படும் - சிரிக்கப்படும்; மடன்மாவேறி - மடலேறுதல்; மடலேறுதலாவது ஒருவன் ஒரு பெண்ணின்மேல் காதல் கொள்ள, அந்தப் பெண்ணை மணம் செய்து கொள்ள முடியாத நிலை ஏற்படுமாயின், அவன், பனங்கருக்கு மட்டைகளால் குதிரை ஒன்று செய்து, அதில் ஏறி உட்கார்ந்துகொண்டு, தான் இன்ன பெண்ணை விரும்புகிறேன் என்று அந்தப் பெண்ணின் ஓவியத்தை எழுதிக் கையில் ஏந்தி, ஊரார் இரக்கப்படும்படி வீற்றிருக்க முயலுவான். ஊரார் அவனை மடலேறவேண்டாம் என்று சொல்லி அந்தப் பெண்ணையே அவனுக்கு மணம் முடித்துவைக்க முயலுவார்கள்.]

‘வகுப்பற்ற சமுதாயம்’

[4—6—53ம் நாளன்று இரவு 7-30 மணிக்குச் சென்னை வானொலி நிலையத்திலிருந்து தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர் எஸ். நடராஜன் (செயின்ட் கேப்ரியல் உயர்நிலைப் பயிற்சிப்பள்ளி தலைமையாசிரியர்) அவர்களும், ‘ வகுப்பற்ற சமுதாயம் ’ என்னும் பொருள் பற்றி ஒலிபரப்பிய விளக்கஆய்வுஉரை சிறிது சுருக்கத்துடன் கீழே தரப்படுகிறது.]

நெடுஞ்செழியன்:—வாங்க நண்பர் நடராஜன், வணக்கம்.

நடராஜன்:—நல்வரவு மிஸ்டர் நெடுஞ்செழியன், வணக்கம்.

நெ:—மனித சமுதாயம், பிறப்பிலே, வளர்ப்பிலே, இறப்பிலே, உருவ அமைப்பிலே, இன்பம் அடையவேண்டும் என்ற வாழ்க்கையின் குறிக்கோளிலே ஒரே இனமாகத்தான் காணப்படுகின்றது. அப்படியிருந்தும் மக்கட்சமுதாயம் இன்றைய நிலையில் ஒரே இனமாக வாழவில்லை; பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. பிளவுகளும், பேதங்களும் எண்ணத் தொலையாதனவாக இருக்கின்றன பார்த்தீர்களா ?....

நட:—ஆமாம். பல பிரிவுகள் இருக்கின்றன. நிறம், மதம், பொருள், ஆதாயம், தொழில், வாழ்க்கைப் பண்பு, நாகரிகம் முதலியவைகளில் பிரிவுகள் காணப்படத்தான் செய்கின்றன.

நெ:—வெள்ளையன் - கறுப்பன், இந்து-முஸ்லிம், உயர்ந்தவன் - தாழ்ந்தவன், பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி, சான்றோர் - கயவர், மேல்நாட்டான் - கீழ்நாட்டான் போன்ற இப்படிப்பட்ட பிரிவுகள் மனித சமுதாய வாழ்விற்கு முன்னேற்றம் அளிக்கத்தக்க அவசியமுள்ளவை என்று நீங்கள் கருதுகிறீர்களா ?

நட:—அவசியந்தான் என்று முடிவான பதில் சொல்வதற்கில்லை. சில பிரிவுகள் மனித சமுதாயத்திற்கு இயற்கையிலேயே இருப்பது போலல்லவா காணப்படுகின்றன. உதாரணமாக வாழ்க்கைப் பண்பு அவரவர்கள் அறிவைப் பொறுத்துள்ளது. இதில் வித்தியாசம் இருப்பதைத் தடுக்கமுடியாதல்லவா? ஆனால் நிறம் போன்றவைகளால் ஏற்படும் பிரிவுகள் அவசியமல்ல என்று ஒப்புக்கொள்கிறார்கள். அதுபோலவே திறமை, அறிவு, இவைகளால் ஏற்படும் பிரிவுகள் மனிதர்களின் இயல்பைச் சேர்ந்தவையாகும். தொழில், பொருள் ஆதாயம் என்பவைகளால் ஏற்பட்டுள்ள பிரிவுகள் அவசியமில்லாதவை என்று கருதலாம்.

நெ—சமுதாயத்தில் அறிவு, பண்பு, திறமை, திண்மை முதலியவற்றால் ஏற்படும் பிரிவுகள் தவிர்க்க முடியாத இயற்கைப் பிரிவுகளாகக் காணப்பட்டாலும், மதம், நிறம், பொருள், தொழில், ஆதிக்கம் இவற்றால் ஏற்பட்டுள்ள பிரிவுகள், ஒரு சாரார்க்கு உயர்வையும், மற்றொரு சாரார்க்குத் தாழ்வையும், ஒரு சாரார்க்கு இன்பத்தையும், இன்னொரு சாரார்க்குத் துன்பத்தையும் தருவதால், இந்த அவசியமற்றப் பிரிவுகளைத் தவிர்க்க முடியாதா? எல்லோரையும் உயர்வைத் தரக்கூடிய - இன்பம்பெறக் கூடிய ஒரே நிலைக்குக் கொண்டுவர இயலாதா ?

நட:—மனித இயல்பினால் ஏற்பட்டுள்ள பிரிவுகளை நாம் தவிர்க்க முயன்றால், தவிர்த்துவிடலாம். அறிவு, நாகரிகம், வாழ்க்கைப்பண்பு முதலிய வித்தியாசங்களைக் குறைத்துக் கொள்வதில், எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அரசியல் நோக்கம், மனித சமூகத்தின் நல்வாழ்க்கையைக் கருதுவதாயிருந்தால், அதாவது அரசியல் லட்சியம் ஒரு (Welfare State) என்பது போலிருந்தால், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதினாலும், நல்ல கல்வியறிவு திட்டத்தினால் அறிவை வளர்ப்பதினாலும் இந்த இயல்பான பிரிவுகளைக் குறைத்துவிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், அவசியமற்றப் பிரிவுகளை நீக்குவதில்தான் முரண் ஏற்படும்

போலிருக்கிறதே. முக்கியமாக மதத்தினுல் ஏற்படும் பிரிவுகளை நாம் தவிர்க்க முடியுமா?

நெடு:—உறுதியாகத் தவிர்க்க முடியும். மதக் கொள்கைகளும், சடங்குகளும், முறைகளும், அடையாளங்களும், அவை பற்றி உயர்வு தாழ்வு, கற்பிக்கும் தன்மையும் மனிதனுலேயே பரப்பப்பட்டு, மனிதனுலேயே வளர்க்கப்படுகின்றன. எனவே, மனிதன் ஏற்படுத்திக்கொண்ட முறைகளால், மனித சமுதாயத்திற்குத் தீங்கும், தாழ்வும் ஏற்படுகின்றன என்ருல், அந்த முறைகளை மனிதன்-தானே அகற்றிவிட முயன்ருல், சமுதாயம் வளர்வதற்கு நிச்சயம் வழி ஏற்படுமே. மதத்துக்கு மதம் ஏற்படும் பேதங்களில், எவை எவை உயர்வு தாழ்வு கற்பிக்கக் காரணமாக இருக்கின்றனவோ, அவைகளை அகற்றி விட்டால், மனமாற்சரியம் நீங்கி, மன மகிழ்ச்சி ஏற்படும் என்பது உறுதி.

நட:—நீங்கள் சொல்லுவது சரியே. கடவுள் ஒருவரே என்று எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொள்வதினுல், மனிதர்களிடத்தில் சகிப்புத் தன்மை வளர வழி இருக்கிறது. சகிப்புத் தன்மை வளர்ந்தால் மதத்தினுல் ஏற்படும் பிரிவுக்கு வலிவும், அவசியமும் அற்றுப் போகும். வெவ்வேறு மதஸ்தர்கள் சகோதரர்களைப் போல் வாழலாம். ஆனல் நிறம் காரணமாக ஏற்படும் பிரிவுகள் அல்லவா உலகத்திலே பெரிய பிரச்னைகளைக் கிளப்பி இருக்கின்றன. இவற்றை நீக்கினுலல்லவா மானிட சமுதாயத்திலேயே அமைதி ஏற்பட முடியும்?

நெடு.—ஆம், நிறம் சமுதாயத்தைக் கூறு படுத்திக் குற்றஞ்சுமத்திக் குறையுண்டாக்கிக் கொடுமைப்படுத்தித்தான் வருகின்றது. வெள்ளை உயர்ந்தது என்றும், கறுப்பு தாழ்ந்தது என்றும், உலகில் இன்று எப்படியோ ஆதிக்கத்தில் வந்து விட்ட வெள்ளை நிறம் கூறுகிறது; கறுப்பு நிறத்தைச் சொல்லொணுக் கொடுமையும் புரிந்து வருகிறது. அமெரிக்காவிலே, தென் ஆப்ரிக்காவிலே, ஆஸ்திரேலியாவிலே நிறம்பற்றி இழைக்கப்படும் கொடுமைகளுக்குக் கறுப்பர்கள் ஆளாகி வருகிருர்கள். மனிதனை மனிதன் என்று மதித்து நேசிக்கும் பண்பு, ஆதிக்கம் செலுத்தும் வெள்ளையர்களிடம் ஏற்பட்டால், அந்த நிறபேதமும் அறவே ஒழியும் என்பது திண்ணம். ஒரு ஆப்ரகாம் லிங்கன் தோன்றியதால், ஓரளவுக்கு அமெரிக்காவில் நிறபேதம் ஒழிந்தது. ப ஆப்ரகாம்லிங்கன்கள் தோன்றினுல், நிறபே முழுவதும் அமெரிக்காவிலே மட்டுமல் அவனி முழுதும் ஒழிந்துபோகும் என்பதி ஐயமில்லை.

எனவே வெள்ளையர் - கறுப்பர் ஆகியவ டையே காணப்படும் நிறத்தின் பேதத்தை அவ்வளவு எளிதாக ஒழித்துவிட முடியாத என்ருலும், அந்த நிறங்களின் மீது கட்ட வளர்த்து வரும் நினைப்புகளின் பேதங்களை நி சயமாக ஒழித்துவிடலாம். நிறபேதத்தினுல் ஏ பட்டுள்ள கொடுமைகளை ஒழிப்பதைவிடச் சற்று எளிதானதுதான், பொருள் காரணமாக ஏற்பட்டிருக்கும் பேதங்களையும், கொடுமைகளையும் ஒழிப்பது.

நட:—பொருள் நிலையினுல் ஏற்படும் வித்தியாசங்கள், மனித சமுதாயத்தில் ஏற்படும் உயர்வு - தாழ்வுகளுக்கு அடிப்படையானது. இவ்வித்தியாசத்தை நீக்குவது சுலபமெனக் கருதலாம். ஆனல் நடைமுறையில், இது மிகக் கடினமானதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. பணமே சக்தி என்று சொல்லுகிருர்கள். பணம் கொண்டவர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் கைவிட மறுப்பார்கள். எனினும் செல்வம் என்பது நிரந்தரமானது அல்ல. இது ஆறு இடும் மேடும் பள்ளமும் போல் மாறிக் கொண்டு வருவதானதால், இதனுல் ஏற்படும் வித்தியாசத்தைக் குறைப்பது அவசியம். பணக்காரன் என்பதினுல், ஏழைக்கில்லாத உரிமைகளைக் கொண்டாடுவது தவருகும். மனித சமுதாயத்தில், செல்வந்தர்களுக்கு இந்தத் தனிப்பட்ட உரிமை இல்லை என்பது ஏற்பட்டு விட்டால், இந்த வித்தியாசம் நீங்கிவிடும். தொழிலினுல் கூட உயர்வு-தாழ்வு தோன்றுகிறதல்லவா? சில தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களை மேன்மையனவர்கள் என்று கருதுகிருர்கள். மற்ற தொழில்களைத் தாழ்வானது என்று குறை கூறி, அவற்றில் ஈடுபட்டுள்ளவர்களை இழிவுபடுத்துகிருர்கள். இதெல்லாம் நியாயமா? நியாயமில்லை என்ருல், இதை நீக்க என்ன செய்யலாம்?

நெ:—மனிதனுல் செய்யப்படும் தொழில்கள் எல்லாம், வாழ்க்கையை ஈடேற்றுவதற்கான வழிகள் என்ற நோக்கத்தில் ஒரே தன்மை கொண்டதுதான். ஆனல் அறிவு,

ஆற்றல், திறமை, அருமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சில தொழில்கள் தரம் உயர்ந்தனவாகவும், வேறு சில தரம் குறைந்ததாகவும் கருதப்படுகின்றன. யார் யார் எந்தெந்தத் தொழிலைச் செய்தாலும், நாட்டின் பெருங்குடி மக்கள் என்று ஒன்று கூடும் போதும், குடிமக்களுக்கான உரிமைகள் என்று கணக்கிடும் போதும் ஒரே தன்மையான வாய்ப்புகளும், வசதிகளும் அளிக்கப்பட்டால், தொழில் காரணமாக ஏற்பட்டுள்ள உயர்வு - தாழ்வு தாமே அழிந்துவிடும். ஆனால் இன்றைய நிலையில், குறிப்பாக நமது நாட்டில், குறிப்பிட்ட தொழில்கள் பரம்பரைத் தொழிலாக ஆகி, அந்தந்தத் தொழிலைச் செய்வோரும் அவர்வழி வந்தோரும், உயர்வு - தாழ்வு என்ற தொழிற் கற்பனைக்கேற்ப வசதிகளையும், தகுதியையும் பெறவேண்டி ஏற்பட்டதால், அந்த வசதிகளும், தகுதிகளும் பிறப்போடு நாளடைவில் ஒட்டப்பட்டு விட்டன. அதனால் பிறப்பின் காரணமாகச் சமுதாயம் பிரிந்து கிடக்க நேரிட்டுவிட்டது. வாய்ப்புகளும், வசதிகளும் தொழிலைப் பொறுத்ததேயொழிய, பிறப்பைப் பொறுத்து அல்ல என்றும், அந்தந்த பிறப்பைச் சேர்ந்தவர்கள் அந்தந்த தொழிலைச் செய்யவேண்டும் என்ற நியதியில்லாமல், அந்தந்த திறமையுடையவர்கள் அந்தந்த தொழிலைச் செய்வது என்றும் நிலைமையை மாற்றி அமைக்க முற்பட்டால், தொழில் காரணமாகப் பேதங்கள் ஏற்படமாட்டா; தீங்குகள் இழைக்கப்படமாட்டா; வாய்ப்புகள் குறைக்கப்பட மாட்டா; வசதிகள் போக்கப்படமாட்டா. அப்பொழுது தொழில்கள், குற்றம் இழைக்கும் பேதங்களாகக் காணப்படாமல், திறமையைக் குறிக்கும் படிக்கட்டுகளாகக் காணப்படும்.

நட:—தொழிலில் திறமைதான் முக்கியமானது. பிறப்பையும், தொழிலையும் சம்பந்தப்படுத்துவது சரியா என்று ஆராய வேண்டியதுதான். ஆயினும், மனிதன் ஓரளவு சுயநலம் கருதுபவனல்லவா? தான் அடைந்த தொழில் திறமையையும், தான் அறிந்த தொழில் நுட்ப அறிவையும், தன் வாரசுதார் பயனடைய வேண்டுமென்று கருதி, அவற்றை இரகசியமாகப் பேணி, தனது மகனுக்குக் கற்பித்துவருவது மானிட இயல்புதானே. இது இருப்பதினால்தானே, இந்த நாட்டில் தொழிற் கல்வி வசதிகள் இல்லாவிட்டாலும், பலர் தொழில் நிபுணத்துவம் அடைந்தவர்களாகப் பரம்பரையாக இருந்து வருகிறார்கள்.

நே:—நீங்கள் குறிப்பிடுவது போல், சிற்பம் செதுக்குதல், ஓவியம் வரைதல், பொன்வேலை செய்தல், இரும்புக் கருவிகள் வார்த்தல், தச்சு வேலை செய்தல், வைத்தியம் பண்ணுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டோர் தாங்கள் அறிந்த தொழில் திறமையைத் தம் வீட்டார்க்கே, தம்மைச் சேர்ந்தார்க்கே சொல்லிக் கொடுத்தால், அவற்றால் அடையும் ஊதியம் தங்களைச் சேர்ந்தோர்க்கே பயன்படும் என்று கருதிச் செய்த சுயநலச் செய்கை முன்பெல்லாம் இருக்கத்தான் செய்தது. முன்பெல்லாம் அந்த முறை இருந்திருக்க ஏதேனும் நியாயம் இருந்திருந்தாலும், இந்தக்காலத்தில் அந்த முறை அறவே அவசியமில்லை. ஏனெனில் முன்பெல்லாம் தொழிற்கல்வியைக் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பு அந்தந்தத் தொழில் திறமையாளனிடத்துமட்டுமேகாணப்பட்டது. தொழிற் கல்விக்கும், அரசாங்கம், ஊராளுமன்றம் ஆகியவற்றிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமலிருந்தது. அப்பொழுது பெரும்பாலான மக்களுக்கு இயல்பான சுயநலம் குடியேறி, தொழில் முறையில் பரம்பரையை உண்டாக்கி, அதனால் சாதிகள் ஏற்படவும், பிறகு சமத்துவம் அற்ற சங்கடங்கள் ஏற்படவும் காரணமாயிற்று. இப்பொழுது தொழிற் கல்வியைப் பரப்பவும், எல்லோர்க்கும் கொடுக்கவும் ஜனநாயக அடிப்படையில் அரசாங்கம் உருவாகியுள்ளதால், தொழில்களைச் சாதியை அடிப்படையாக வைத்து வளரவிடாமல், திறமையை அடிப்படையாக வைத்து வளரவிட வாய்ப்பு இருக்கிறது. இத்தகைய வாய்ப்புக்கு இடம் அதிகம் அளிக்கப்பட்டால், தொழில் பரம்பரை ஒழியும்; தொழில் பரம்பரை ஒழிந்தால் தொழில் பற்றிய சாதி ஒழியும்; தொழில் பற்றிய சாதி ஒழிந்தால் சுயநலமும் ஒழியும்; பொதுநலம் எங்கும் பொலிவுடன் திகழும்; சமவாய்ப்பு எங்கும் இடம்பெறும்.

நட:—நீங்கள் கூறுவதில் பெரும் உண்மையிருக்கின்றது. சமூகத்தில் சமவாய்ப்பு மிக அவசியமானது. திறமை எந்த இடத்தில் காணப்பட்டாலும், அது நாட்டு சேவைக்குப் பயன்பட வேண்டும். எனவே சம வாய்ப்பு மிகவும் முக்கியமானது.

பேதமற்ற வாய்ப்பு, சமஉரிமை போன்ற நிலை ஏற்பட்டால் சமத்துவ உணர்ச்சி தோன்றுமென்பதை நீங்கள் வெகு அழகாகச் சொன்னீர்கள். அந்நிலை உண்டாக நாம் எல்லோரும் பாடுபட வேண்டும். ஆனால் அந்நிலை எளிதில் வருமா? வராது என்று வாளாயிருத்தல் தவறு. அது மானிட சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மாறாகும். வரும் என்ற நம்பிக்கைதான் முயற்சிக்கு ஊக்கமளிக்கும். எனவே, வகுப்பற்ற சமுதாயம் என்பதை ஒரு வாழ்க்கை லட்சியமாகக் கொள்ள வேண்டியதுதான். அப்படியிருந்தால்தான், பல பிரிவுகளாக நாம் பிரிந்திருந்தாலும், ஒரு பிரிவு அல்லது வகுப்பு நாகரிக மேம்பாடு, வாழ்க்கைப் பண்பு, தொழில் திறம் இது போன்ற வித்தியாசங்களினால் பிறர் மேல் ஆதிக்க உரிமை கொண்டாடாமல் இருப்பார்கள். உயர்வு—தாழ்வு உணர்ச்சியில்லாமலிருக்கும்.

நே;—வகுப்பற்ற சமுதாயம் என்பதை முற்றும் முடிந்த ஒரு உருவமாக என்றும் எல்லா வகையிலும், எல்லாத் துறையிலும் காணமுடியாது என்றாலும், நீங்கள் கூறியதுபோல் ஒரு இலட்சியமாகக் கொண்டிருந்தால்தான், அழிக்கக் கூடிய - அவசியமற்ற - சமத்துவத்தைக் கெடுக்கும் பேதங்கள் நாளடைவில் ஒழியவும், சமத்துவம் கெடாமல், சமுதாயத்திற்கு வளர்ச்சி தரும் பிரிவுகள் நாளடைவில் குறைந்து போகவும் வழி பிறக்கும். மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத தேவைகள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், வாழ்வழி, ஓய்வு நேரம், ஓய்வு நேரத்தில் நுகர்வதற்கான உல்லாசவசதிகள், நோயற்ற வாழ்வு ஆகியவையாகும். சக்திக்கேற்றபடி உழைத்தல், தேவைக்கேற்றபடி வசதிகளைப் பெறுதல் என்ற அடிப்படையில் இந்தத் தேவைகளைப் பெற மனித சமுதாயம் தொடங்கியிருக்குமேயானால், அவசியமற்ற பேதங்கள் அறவே ஒழிந்து விடும். இந்தத் தேவைகளை ஒரு சாரார் பெறவும், மற்றொரு சாரார் பெற முடியாமலும் வகுப்புகள் அமையும்போதுதான், சமத்துவம் அற்றுப் போகிறது—வகுப்பற்ற சமுதாயம் என்ற உணர்வும் தோன்றுவதில்லை. இந்தத் தேவைகள் எல்லோர்க்கும் தேவையான அளவு நிறைவேற்றப்படுமாயின், வகுப்பற்ற சமுதாயம் என்ற உணர்வு நின்று நிலவும்; அப்பொழுது அறிவு, ஆற்றல், திறமை, அருமைபற்றி எழும் பிரிவுகள், வளர்ச்சியின் அறிகுறிகளாகக் காணப்படுமேயொழிய, பிரிவுகளின் பிரதிபலிப்பாகக்காணப்படமாட்டா. எனவே இந்த வகையில் வகுப்பற்ற சமுதாயம் தேவை என்ற இலட்சியத்தைக் கொண்டால் நாமும் வளருவோம்; உலகோரும் வளருவார்கள். இந்த அளவோடு பிரிவோம். போய் வருகிறேன், வணக்கம்!

உயிர்க்கோட்பாடு

—(0)—

பிரான்ஸ் நாட்டில் ஜீன் பால் சார்ட்டர் என்பவர் இளைஞர்; சிறந்த தத்துவஞானி என்றும், நாடகாசிரியர் என்றும் போற்றப்படுபவர். அவருடைய கருத்துக்கள் இளைஞர் உலகைப் பகுத்தறிவு வழியில் முற்போக்கு உலகிற்கு அழைத்துச் செல்வதாக இருக்கின்றன. மனிதனுடைய நல்வாழ்வுக்கு எது தேவையோ அந்த அளவுக்கே பாடுபடவேண்டும், என்ற நோக்கத்தோடு புதியதொரு இயக்கம் பிரான்சில் இப்பொழுது பரவி வருகிறது. அதற்கு 'உயிர்க் கோட்பாடு' என்று பெயர்.

ஜீன் பால் சார்ட்டர் 1943-ம் ஆண்டில் "இருப்பதும் இல்லாமையும்" என்ற 500 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்று இயற்றினார். அந்த நூலே இந்தப் புதிய இயக்கத்தினர்க்கு முக்கியவழிகாட்டி.

உயிர்க்கோட்பாட்டின் கொள்கைப்படி "கடவுளே கிடையாது. கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்பது நமக்கு முக்கியமேயல்ல. அவருக்கும் நமக்கும் இடையே எவ்விதச் சம்பந்தமும் இல்லை" என்பதாகும் என்று சார்ட்டர் குறிப்பிடுகிறார்.

இன்பந்தரும் புகழுரை

எப்பொழுதுமே புகழுரைகள் இன்பம்தான் அளிக்கும். புகழ்வோர்க்கும் இன்பம்; புகழப்படுவோர்க்கும் இன்பம்.

சானிஸ் பால்லக் என்ற ஆங்கில ஆசிரியர், ஒரு சீன நண்பரை ஏதோ புகழ்ந்துரைத்தாராம்.

அந்தச் சீனர் சொன்ன பதில் இதுதான்: "மலர்களைப்பிறருக்கு வழங்கும் கைகளிலேயும், அந்த மலர்கள் கொஞ்சம் வாசனையை விட்டுத்தான் செல்லும்."

தையற்கலை

TAILORING ART

[கே. பி. சுந்தரம் G. C. T., T. T. C.]

தையற்றொழிலில் ஈடுபடுபவன் எவ்வாறு கலையுள்ளம் படைத்த சிறந்த கலைஞனாக இருக்க வேண்டியவனாகிறான் என்பதை முன்பு கண்டோம். தையற்காரன் கலைஞனாகமட்டுமல்லாமல், விஞ்ஞான அறிவுபெற்ற விஞ்ஞானியாகவும் இருக்க வேண்டியவனாகிறான்.

தையற்றொழிலாளி உடம்புக்குப் பொருந்தக் கூடியவாறு சட்டைகளை அமைக்கும் திறம் ஒன்றை மட்டுமே பெற்று, அதில் வேறு அழகையோ, புது மாதிரித் தன்மையையோ காட்ட இயலாவிட்டால், அவனைக் கலைஞனாகச் சொல்ல முடியாது. அவன் வெறும் அழகிய மடிப்புகளையும், நெளிவுகளையும் அமைத்துச் சட்டைகளை இயற்றினாலும், உடம்புக்குப் பொருந்துவதாக அமைக்கும் விஞ்ஞான அறிவு இல்லாதவனாயின் பயனில்லை. தையற்கலை ஒன்றோ பலவோ ஆன வெட்டுமுறை வகை பற்றிய தெளிவான அறிவையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதன்மேல்தான் கலைஞன் தனது கலைத்திறனையும், உழைப்பின் திறனையும் வெளிப்படுத்த வேண்டும். தையற்றொழிலின் எல்லா முறைகளும் வெட்டுதலாகிய விஞ்ஞானத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

ஒரு தையற்றொழிலாளி ஒரு உயர்தரத் தையற் கலைஞனாகத் திகழ வேண்டுமானால், அவனுக்குக் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்கள் போதுமான அளவு கலைத்திறனை உணர்ந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். கலையுள்ளத்தோடு கூட வெட்டும் இலக்கணத்தைத் தொழிலாளர்கள் புரிந்து கொள்ளாவிட்டால், உடுப்புகளை அவர்கள் பாழாக்கி விடுவார்கள். எனவே, தையற்றொழில் நாட்டில் சிறந்தோங்கி நிலவ வேண்டுமானால், அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் அனைவரும் பயிற்சிபெற வேண்டியது இன்றியமையாததாகும்.

தொழிலாளர்கள் பயிற்சி பெறப், பள்ளிகள் வைப்பதும், கல்லூரிகள் ஏற்படுத்துவதும், வகுப்புகள் நடத்துவதும், கட்டுரைகள் எழுதுவதும் சிறந்த துணைக் கருவிகளாகும்.

தையற்றொழிலை எவ்வளவு அக்கரையோடும் அறிவோடும், ஆற்றலோடும் கண்காணித்து வர வேண்டும் என்பதைக் குறிப்பிடவந்த தையற்கலை நிபுணர் ஒருவர், "நம்முடைய தொழில் டாக்டர்களுடையதைக் காட்டிலும் மிகவும் கடுமையானதாகும். டாக்டர்கள் தங்களுடைய முட்டாள்தனங்களை, தங்கள் முட்டாள்தனத்தால் இறந்து பட்டவர்களைச் சுட்டெரித்து அழித்து விடுவதன் மூலம் மறைத்து விடலாம். ஆனால் நம்முடைய முட்டாள்தனமோ நடுத்தெருவில் மக்களால் தூற்றித் திரியும்படி நம்மைக் காட்டிக் கொடுக்கும்" என்று கூறினார்.

அரசர்கள், மந்திரிகள், போர்த்தலைவர்கள், போர்ப்படை வீரர்கள், அதிகாரிகள், சேவகர்கள், போலீஸ்காரர்கள், மதக்குருமார்கள், மடாதிபதிகள், நீதிபதிகள், வழக்கறிஞர், பட்டம் பெற்றோர், பாராளுமன்றத்தினர், அரசியல் கட்சிக்காரர்கள் ஆகிய பலவேறுபட்ட வகையினரைப் பிரித்துக் காட்டுவது உடைகள்தாம். ஒரு வகையில் இவர்கள் எல்லோரையும் தையற்கலைஞனே தோற்றுவிக்கிறான் என்றாலும் தவறில்லை. சுருங்கக்கூறின் தையற்கலைஞனுடைய படைப்புத் திறமையின் உதவியில்லாமல் ஒரு சமூகம் அதன் அளவில் சிறப்புடையதாக விளங்க முடியாது என்னலாம்.

தையற்கலைத்துறையில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற ஆர்வமும் எழுச்சியும் உல

கெங்கும் இந்நாளில் தோன்றி யுள்ளன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தையற்கலை வளர்ந்து கொண்டே வருகிறது.

முதன் முதல் தையற்கலையை வளர்ப்பதிலே அரும்பாடுபட்டவரும் அதிலே சிறந்த வல்லுநராக உலகோரால் போற்றப்பட்டவரும் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜான் வில்லியம்சன் என்பவர் ஆவார்.

அவர் வெறும் தையற்காரராக மட்டுமல்லாமல் சிறந்த சமுதாய சீர்திருத்தக்காரராகவும், அரசியல் விடுதலை வேட்கை கொண்டோராகவும் திகழ்ந்தார். வழக்கமாக உலகெங்கும் சீர்திருத்தக்காரர்கள் மீது வீசப்படும் வசையம்புகளும், கொடுமைகளும் ஜான் வில்லியம்சன் மீதும் அந்நாட்டு மக்களால் வீசப்பட்டன. அறியாமையில் மூழ்கிக்கிடந்த மக்களிடத்தே அறிவொளி வீச அரும்பாடு பட்டார். தன்னிடத்தே வரும் வாடிக்கைக்காரர்களிடத்துப் பழைய ஏற்பாடுகள் எண்ணங்கள், முன்னோர்களின் கட்டளைகள், சாஸ்திர முறைகள் அத்துணையிலும் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறி, பகுத்தறிவுக் கொள்கைகளை அறிவுறுத்தி சமுதாயம் முன்னேறுவதற்கான வழி வகைகளையெல்லாம் ஓயாமல் சொல்லி வருவதிலே அவருக்கு ஆர்வம் அதிகம். அதிகாரிகளால், பழமைவிரும்பிகளால் அவர் பல தடவைகள் கொடுமைக்குள்ளாக்கப் பட்டார்.

சமுதாய முன்னேற்றத்திலே அவர் கொண்டிருந்த தனியா ஆர்வத்தால், அவரது தொழிலான தையற்றொழிலிலே நல்லதொரு மறுமலர்ச்சி காண வேண்டும் என்று முனைந்து பாடுபட்டார்.

தையல் தொழில் தற்குறிகளின் தொழில், மிகத் தாழ்ந்த தொழில், அதற்குக் கல்வி தேவையில்லை என்ற மனப்பான்மையில் மங்கி—மதிப்பற்றுக் கிடந்த தையல் தொழிலாளர்களைத் தட்டி எழுப்பி, தையல் தொழில் மிகச் சிறப்புடையது என்றும், அது ஓர் அரிய கலை என்றும், மனித நாகரிகத்திற்கு வித்தூன்றும் நற்கலை என்றும் ஜான் வில்லியம்சன் எங்கணும் உணர்த்தத் தலைப்பட்டார். தையல் தொழிலின் நுணுக்கங்களை அறிந்து கொள்ள கல்வி தேவை என்பதை உணர்ந்து, அந்தக் கல்வியைப் பரப்ப ஏடு ஒன்று காண அரும்பாடுபட்டார். தையற்கலை பற்றிய நுணுக்க விளக்கத்தோடு சீர்திருத்தக் கருத்துக்களையும் எழுதி "தையற்காரன்" (Tailor) என்ற பெயரில் துண்டு வெளியீடுகள் அவ்வப்போது வெளியிட்டு வந்தார். எந்தச் சீர்திருத்தத்திற்கும் ஏற்படுகிற எதிர்ப்பு இந்த அவருடைய முயற்சிக்கும் ஏற்பட்டது. தமது முயற்சி மேலும் வெற்றி பெறச் சாதாரண துண்டு வெளியீடுகள் போதா, திங்கள்தோறும் வெளிவரும் இதழ் ஒன்றைத் துவக்க வேண்டும் என்று பெரிதும் முயன்றார். அதன் பயனாக 1866-ம் ஆண்டு "தையற்காரன்" (Tailor) என்ற பெயரிலேயே எழில் மிகுந்த ஏடு ஒன்று வெளிவரலாயிற்று.

ஆனால் அதற்கு முன்பே சாதாரண முறையில் தையற்கலையைக் குறித்து, 1833-ம் ஆண்டில், "The Gentlemen's Magazine" என்ற இதழும், 1848 ல் 'Ministers Gazette of Fashions' என்ற இதழும் தொடங்கப் பெற்று நடந்து வந்தன. 1848 ல் 'Ministers Cutting Acadamy' என்ற கலைக் கல்லூரியும் தொடங்கப்பட்டது. 1866-ம் ஆண்டில் 'Tailor and Cutter' என்ற பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. ஜான் வில்லியம்சன் தாம் ஒருவராக இருந்தே, கட்டுரைகள் பல எழுதி, இதழை வெளியிட்டு வந்தார். அவர் ஆறு திங்கள்கள் ஓய்வின்றி உழைத்து வந்ததால், அவரது உடல் நலமும் பொருள் நிலையும் கெட்டன. மேலும் பல தொல்லைகள் தொடர, இதழை ஆறு திங்களிலேயே நிறுத்தும்படி நேரிட்டு விட்டது.

சிறிது நாட்கள் கழித்து ஜான் வில்லியம்சன் ஸ்காட்லாந்தை விட்டு இங்கிலாந்து வந்தடைந்தார். அங்கும் தம் முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் 'Tailor' (தையற்காரன்) என்ற இதழைத் திங்கள் ஒரு முறையாகக் கொண்டு வந்தார். அக்காலத்தில் தையல் தொழிலின் நிலை எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்ள அந்த இதழ்கள் நன்கு பயன்படுகின்றன.

அக்காலத்தில் ஜான் வில்லியம்சன் எழுதிய தையற்கலை நுணுக்கங்கள் மிகைபட எழுதப் பட்டனவாகக் கருதப்பட்டன. 'தையற்காரன்' இதழில் வெளிவந்த கட்டுரைகள், புதுப்புதுக் கருத்துக்களைத் தாங்கி வெளி வந்தன. அவை அக்கலைபற்றிய வரலாற்றாசிரியர்களின் ஆராய்ச்

யார் இந்த ஆச்சாரியார்?

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதற்குக் காரணம், அவர் 'ஆச்சாரியார்' என்பதாலேயேயாகும் என்று சிலர் தவறுபட எண்ணி, அவ்வாறே பேசி வருகின்றனர்.

கட்டாய இந்தியைப் புகுத்திய காலத்தில், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரை, 'ரெட்டியார்' என்ற காரணத்தால் திராவிட இயக்கம் எதிர்க்காமல் இருக்கவில்லை; மிகக் கடுமையாக எதிர்த்தது. பள்ளி முன் மறியல் செய்தது; முதன் மந்திரிக்கும், கல்வி மந்திரிக்கும் சென்றவிடமெல்லாம் கறுப்புக்கொடி காட்டி வெறுப்பைத் தெரிவித்தது; குடந்தையிலே போராட்டம் நடத்தி அந்த மண்ணிலே குருதியைக் கொட்டிற்று.

பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்துக்காகவே ஒருவரை ஆதரிப்பதும், பார்ப்பனர் என்ற காரணத்துக்காகவே மற்றொருவரை வெறுப்பதும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடமில்லை. பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்துக்காகத் திருவாவடுதுறை பண்டார சன்னதிகளைக் கழகம் போற்றியதில்லை; கவி சுப்பிரமணிய பாரதி பார்ப்பனர் என்ற காரணத்துக்காக அவரைப் பெரும்வகையில் போற்றாமலிருந்ததில்லை.

ஆச்சாரியார் கொண்டுவரும் எல்லாவற்றையும், எதிர்க்கும் தன்மையர் அல்லர் கழகத்தார். ஆச்சாரியார் தஞ்சை மாவட்டத்தில் சாகுபடியாளர் மசோதாவைக் கொண்டு வந்தார். அதில் ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும், அந்த மசோதா சாகுபடியாளர்க்குப் பயன் தரக்கூடியது என்று கருதி அதனைத் தீர்மானம் மூலம் கழகம் வரவேற்றிருக்கிறது. அந்த மசோதாவைத் தென்னாற்காடு மாவட்டத்திற்கும் உரிமையாக்கியதைப் பாராட்டி, அண்மையில், தில்லையில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டிலே கழகம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

ஆட்சியாளரால் ஒரு திட்டம் கொண்டுவரப்படும்போது, அந்தத் திட்டத்தின் தன்மையையும், அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கத்தையும், அதனைக் கொண்டு வந்தவருடைய உள்ளக்கிடக்கையையும் ஆராய்ந்து பார்க்கிறோம். நல்ல உள்ளக்கிடக்கையின் அடிப்படையிலே, நல்ல நோக்கத்துடன், நல்ல திட்டம் கொண்டு வரப்படும்போதெல்லாம் கழகம் ஆதரித்தே வந்திருக்கிறது. மாறான உள்

சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும். கட்டுரைகள் அழகும், செம்மையும், தெளிவும் உடையன. நாடகங்களில் நடிகர்களின் உடை அமைப்பு பற்றிய விளக்கங்கள் அவ்விதழில் வெளிவந்தன. அக்கால நாடகாசிரியர்களும் நடிகர்களும் அவற்றைப் போற்றிப் படித்து வந்தனர்.

அவ்விதழில் தையற்கலை பற்றிய விளக்கங்கள் அடிக்கடி வெளிவந்த போதிலும், அக்காலத்தில் நடைபெற்ற வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சிகளும் அதில் இடம் பெற்றன. கட்டுரைகள் குறித்துப் பொது மக்களுக்கு ஏற்படும் ஐயங்கள் அவ்வப்போது ஆசிரியரால் விளக்கங் கூறப்பட்டு வந்தன.

தையற்கலை அடைந்து வந்த சீர்திருத்தத் திற்கும், புதுமைக்கும் பல தொல்லைகள் இருந்து வந்தன என்றாலும், ஜான் வில்லியம்சன் முயற்சியில் தொடங்கப்பெற்ற 'தையற்காரன்' (Tailor) கடந்த 87 ஆண்டுகளாகச் சில பெயர் மாற்றத்துடன் தொண்டாற்றி வருகிறது. இப்பொழுது 'Tailor and Cutter' என்னும் பெயர் தாங்கிப் பண்பும் பயனும் குன்றாது அவ்விதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த ஏடு தோன்றிய பின்னர் 1876-ல் 'London Tailor' 1893-ல் 'The Master Tailor', 'Cutters Gazette' 1899 ல் 'Woman wear' 1901-ல் 'The Ladies' Cutter' 1911-ல் 'The Sartorial Gazette, ஆகிய பல தையற்கலை இதழ்கள் வெளிவந்தன. என்றாலும் 'Tailor and Cutter' மட்டுமே தலைசிறந்து விளங்கி வரும் தையற்கலை ஏடாக உள்ளது.

மனித நாகரிக வளர்ச்சிக்கு இன்றியமையாது தேவைப்படும் தையற்கலையை மேலும் மேலும் வளர்ப்பதும் அதன் நுணுக்கங்களை அறிந்து கொள்வதும் நமது கடமையாகும்.

ளக் கிடக்கையில் உருவாகி, மாறான நோக்கத்துடன் வெளிவரும் உருப்படாத திட்டங்களைக் கழகம் எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக்கிறது.

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை அலசிப் பார்க்கும்போது, கல்வியை வளர்க்கும் வகையிலும் சரி, கல்வியைப் பரப்பும் வகையிலும் சரி, எதிர்கால மாணவர்களின் நிலையை உற்றுக் கவனிக்கும்போது சரி, நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலும் சரி, முன்னேற்றத்தை நோக்கும்போதும் சரி உருப்படாததொரு திட்டமாகவே இருந்து வருகிறது. புதிய கல்வித் திட்டம் ஆச்சாரியார் கருத்துப்படி நிறைவேறுவதாக வைத்துக் கொண்டால், வருவாயற்ற குடிசைத் தொழில் உழைப்பிலே ஈடுபட்டிருக்கும் திராவிடப் பெருங்குடி மக்களை அந்தந்தத் தொழிலிலேயே அழுத்திவிடவும், பார்ப்பனர்கள் வருவாய் மிக்க வேறு உயர்ந்த துறைகளில் புகவும் வழி ஏற்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை உற்று நோக்கும்போது, 'வர்ணாச்சிரம முறை' மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றது என்ற உண்மையே உறுதியாகிறது.

ஆச்சாரியார் பலதடவைகளில், தம்மை ஒரு பச்சை வர்ணாச்சிரமி என்றே வெளிப்படையாகவே காட்டிக்கொண்டு வந்துள்ளார். பழைய ஏற்பாடுகள், மனுதர்ம சாஸ்திரம் கூறுபவை, சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் பகருபவை, கீதை சொல்லுபவை, வேத—ஆகம—புராண—இதிகாச—உபநிஷத்துக்கள் மொழிபவை, கீதை சொல்லுபவை, ரிஷிகள் முனிபுங்கவர்கள் செப்பியவை, சனாதன தர்மம், வர்ணாச்சிரம முறை ஆகிய அனைத்தும் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டியவை என்ற கருத்தில் பலதடவை பேசியும், எழுதியும் வந்துள்ளார். மேலே கூறப்பட்டவைகளிலுள்ள கருத்துக்களில், ஒன்றோ பலவோ இந்தக் காலத்துக்கும், மனித சமுதாய முன்னேற்றத்துக்கும் மாறுபட்டவை என்பதை அவர் எங்கும் ஒப்புக்கொண்டதேயில்லை. பழைய ஏற்பாடுகளில் ஒன்றையேனும் மறுத்துக்கூறத் துணிந்தவரல்லர். முன்னோர் வகுத்த முறைப்படி அவனவன் குலத்தொழிலை அவனவன் செய்துகொண்டு வந்தால், கிராமிய வாழ்க்கையில் எவ்வித துன்பமும் ஏற்படாது என்றும், அவனவன் குலத்தொழிலை அவனவன் மறந்துவிட்ட காரணத்தால் தான், கிராமிய வாழ்க்கை சீர்குலைந்துவிட்டது என்றும் எண்ணிடும் பண்பினராகத் தம்மைக் காட்டிக் கொண்டு வந்துள்ளார்.

சென்னையில், சலவைத்தொழிலாளர் மாநாட்டில் பேசும்போது, சலவைத் தொழிலாளர்கள் தம்மை சலவைத்தொழிலாளர் என்று அழைத்துக் கொள்வதைவிட்டு, 'வண்ணான்' என்று பெயரிட்டுக்கொள்வதிலேயே விருப்பங்காட்ட வேண்டும் என்றும், படித்த வண்ணான் வெளுப்பதைவிட, படிக்காத வண்ணான் நன்றாக வெளுக்கிறான் என்றும் ஆச்சாரியார் அறிவுரை பகன்றுள்ளார். குலத்தொழில் நிலைபெற்றிருக்கவேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வங்கொண்டுள்ளார் என்பதற்கு இது ஒரு தக்க சான்றாகும்.

சேலம் பிராமணசேவா சங்கக் கூட்டத்தில் ஒருமுறை பேசும்போது, வேதம் ஓதுவதற்கு வீட்டிற்கு ஒரு பிள்ளையாவது பிராமண சமூகத்தார் ஓதுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். பார்ப்பனர்க்கே உரிய 'வேதம் ஓதும்' தொழில், அவர்களால் மறக்கப்பட்டுவிடக்கூடாது என்றும், பார்ப்பன சமூகம் அந்தப் பண்போடு இயங்கவேண்டும் என்றும் ஆச்சாரியார் கருதுகிறார் என்பது இவற்றால் உணரப்படும்.

சென்ற ஆண்டு சென்னையில் நடந்தேறிய தமிழ் விழாவின்போது, அதன் துவக்கவிழா ஆற்றவந்த அன்பர் ஆச்சாரியார் பேசிய பேச்சு, 23-8-52-ல் சென்னையில் வெளிவந்த 'சுதேசமித்திரன்' நாளிதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில்,

"நம் தேசப் பூர்வீகப்படி திருக்குலத்தானை அழைத்து விழாவை ஆரம்பிக்கச் செய்திருக்கிறார்கள். பழைய காலத்தில் நம் நாட்டில் விழாக்களை திருக்குலத்தானை அழைத்துப்பூணூல் அணிவித்து ஆரம்பித்து வைக்கச் செய்வது முன்னோர்களின் சம்பிரதாயம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். தான் ஒரு 'திருக்குலத்தான்' என்ற உணர்வோடுஆச்சாரியார் வாழ்கிறார் என்பதும், தம்மைத் 'திருக்குலத்தான்' என்று அழைத்துக் கொள்வதிலே பெருமை கொள்கிறார் என்பதும், திருக்குலத்தார் (பார்ப்பனர்) என்ற ஒரு பிரிவும், அதனைத் தவிர்த்த வேறு பல திரு அல்லாத குலப் பிரிவுகளும் உண்டு என்பதை அவர் மனமார ஒப்புக்கொள்ள இசைகிறார்

என்பதும் மேற்கண்ட கூற்றிலிருந்து தெளிவாகின்றன.

இப்படிப்பட்ட ஒருவர் உள்ளத்திலிருந்து, வர்ணாச்சிரம முறைத் திட்டமோ என்று ஐயப்பாட்டிற்குரிய திட்டமொன்று வெளிவந்துள்ளதென்றால், அதுவும் ஐம்பது ஆண்டுக்காலமாக ஊறிக் கிடந்து வெளிவந்துள்ளதென்றால், ஐயப்பாட்டிற்கு இடம் ஏது? 'புதிய கல்வித் திட்டம் வர்ணாச்சிரமத் திட்டந்தான்' என்ற உறுதிபாடே எவர் உள்ளத்திலும் தோன்றும்.

மேலும் அன்பர் ஆச்சாரியார் ஆணவங் கொண்ட அவசரக்காரர் என்பதைப் புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்துவதன் மூலம் நன்கு காட்டிக் கொண்டுள்ளார். புதிய கல்வித் திட்டத்தை ஆதரிப்பதற்காக வேண்டி அவர் ஆங்காங்கு பேசிய பேச்சுக்களும், சட்டசபையில் அவர் நடந்துகொண்ட மாதிரியும் அவர் ஆணவப் போக்குக்குப் போதிய சான்றுகளாகும். திட்டத்தின் நோக்கத்தை, எதிர்ப்பு வளர வளர, எப்படி எப்படியெல்லாம் மாற்றி, மறைத்துக் கூறிக்கொண்டு வருகிறார் என்பதைக் கவனித்தால், தாம் அவசரப்பட்டு புகுத்திவிட்டதையும், அதுபற்றிக் கூறியவைகளையும் உணர்கிறார் என்பது பெறப்படும்.

அவசரமும் ஆணவமும் அவரது இயற்கைப் பண்புகளாகும். அவை அவரது இரத்தத்தோடு இரண்டறக் கலந்துவிட்டன. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம். முக்கியமான ஒன்றைமட்டும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். அவருடைய அவசரமும், ஆணவமும் அவரை ஒருமுறை கொலைகாரராக்கியிருக்கின்றன. அவர் ஈவு இரக்கமின்றி எதையும் செய்யக்கூடியவர் என்பதற்கு அவர்செய்த கொலைக் குற்றமே போதிய சான்றாகும்.

ஆச்சாரியார் ஈவு இரக்கமற்ற அவசரக்கொலைக் காரர்! இச் செய்தியைத் தோழர் மு. பா. ஸ்ரீநிவாஸன் என்ற பார்ப்பனர் எழுதிய 'இராஜாஜி' என்ற நூலின் 20-வது பக்கத்தில் காணலாம். அங்கு காணப்படும் வரிகள் அப்படியே கீழே தரப்படுகின்றன.

"ஒருநாள் இரவு; நடுநிசி; அக்காலத்தில் இக்காலத்தைப்போல் பிரயாணத்திற்கு மோட்டார் வண்டிகள் இல்லை. ஒரு கொலை விசாரணை வழக்கு சம்பந்தமாக நாமக்கல்லுக்குச் சென்றிருந்த திரு ஆச்சாரியார் திரும்பி வருவதற்கு நேரமாகிவிட்டது; குதிரை வண்டியில் சேலத்திற்கு வந்துகொண்டிருந்தார். அக் காலத்தில் வழியில் கொலை களவுகள் நடப்பது வெகு சாதாரணம். ஆகையால் தமது கைத்துப்பாக்கியில் ரவைகள் போட்டுத் தற்காப்புக்கெனத் தயாராக வைத்திருந்தார். வண்டியிலிருந்த திரு ஆச்சாரியார் நன்றாக உறங்கிவிட்டார். வழியில் ஒரு சுங்கச் சாவடி; அங்கே வண்டி நின்றது. காவற்காரன் சுங்கப்பணம் வசூல் செய்ய வண்டியின் பின்புறம் சென்றான். உறங்கிகொண்டிருந்த திரு. ஆச்சாரியார் கண் விழித்தார்; தம்மை யாரோ தாக்க வந்துவிட்டதாக நினைத்தார் அரைத் தூக்கம்; ஆயினும் குறிதவறாது கைத்துப்பாக்கியை எடுத்துக் காவற்காரனைச் சுட்டுவிட்டார். காவற்காரனும் மண்ணில் சாய்ந்தான். இதற்குள் அவர் துயிலும் கலைந்தது; துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் பலர் அங்கே கூடிவிட்டனர். விளக்கெடுத்து வந்து பார்த்தபோது சுடப்பட்டவன் காவல்காரன் என்று உணர்ந்தார்: தமது தவறை உணர்ந்த திரு. ஆச்சாரியார் மிகவும் வருந்தினார்; அவனை உடனே வண்டியில் ஏற்றிக்கொண்டு மருத்துவ விடுதிக்குக்கொண்டுசென்றார்; வழியிலேயே அவன் இறந்துபோனான். திரு. ஆச்சாரியாரின் பேரில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு வழக்கும் நடந்தது; தவறி இருளில் தற்காப்புக்காகச் சுட்டார் என்று நீதிபதி வழக்கைத் தள்ளி விட்டார்."

அவசரப்பட்டுச் செயல்புரிதலும், அதற்காகப் பின்பு வருந்துதலும் ஆச்சாரியாரின் வாடிக்கைப் பண்பாகிவிட்டது. 1938-ம் ஆண்டில் இந்தியைக் கட்டாயமாகத் திணித்தார்; பின் வருந்தினார். பாக்கிஸ்தான் பிரிவினைத் திட்டத்தை முதலில் எதிர்த்தார்; பிறகு வருந்தி ஆதரித்தார். 1942 ஆகஸ்டு கிளர்ச்சியில் சேர மறுத்தார்; துரோகிப் பட்டம் சூட்டப்பட்ட போது வருந்தினார். இப்பொழுது புதிய கல்வித் திட்டத்தை ஆணவத்தால் அவசரப்பட்டுப் புகுத்தினார்; வருந்திக் கொண்டிருக்கிறார்! ஆனால் அவர் உடன்பிறந்த ஆணவம், ஈவு இரக்கமற்ற நெஞ்சு அகலவில்லை; தலைதூக்கிய வண்ணம்தான் இன்னமும்காட்சியளிக்கின்றன! வர்ணாச்சிரம மனப்பான்மை கொண்ட, அவசரப்பட்டுச் செயல்புரியும் தன்மைகொண்ட, சர்வாதிகார ஆணவப்போக்குக் கொண்ட ஆச்சாரியார், ஜனநாயக ஆட்சி மன்றத்தில் இன்னமும் வீற்றிருப்பதுதான், வியப்பையும், வேதனையையும் தரும் காட்சியாகும்!

நாகரிக வளர்ச்சி

வரலாற்றுக் காலத்துக்கு நீண்ட நாட்களுக்கு முன்பு 'குரங்கு மனிதன்' காலத்திற்குப் பிறகு, மனிதன் ஆரம்ப நிலையில் காட்டுமிராண்டியாகத் தான் திரிந்து வந்தான். அவன் கற்றுக்கொண்ட முதல் தொழில் வேட்டையாடுவதாகும்.

விலங்கினங்கள் மிகவாகக் கிடந்த காடுகளையும், அடவிகளையும் தங்களுக்கேற்ற வாழுமிடங்களாகக் கொண்டிருந்தனர், வேட்டையாடித் திரிந்த அக்காட்டு மிராண்டிகள்.

ஆடுமாடுகளைப் பழக்கக் கற்றுக்கொண்ட பின்னர், அவ்வாடு மாடுகளுக்குத் தேவையான புல்வெளிப் பரப்புகளை நோக்கிச் செல்ல வேண்டியவராயினர். மிக்க மரங்கள் அற்ற இடமாகவும். மிக்க நீர்ப்பாங்கு அற்ற இடமாகவும் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத்திலிருந்தனர்.

உழுது பயிரிடக் கற்றுக்கொண்ட நிலையில். நீர் செறிந்த வளமான நிலப்பாங்கினைநோக்கி நகர வேண்டி வந்தது. ஆற்றுப் படுகைகளும், பள்ளத்தாக்குகளுமே அவர்கள் குடியேறுவதற்கு ஏற்ற இடமாகக் காணப் பட்டன. இப்படிக் குடியேறிய மக்கள் நாளடைவில் நிலைத்து வாழும் பண்பினராக மாறினர். இங்கு தான் மனிதனின் நாகரிகமும். பண்பாடும் முதன் முத லில் வளர்ச்சி பெற்றன. ஆற்றங்கரை யோரத்திலே வளர்ந்த நாகரிகங்கள் தாம், பழம்பெரும் நாகரிகங் களாகக் கருதப்படுகின்றன.

நைல் நதிக்கரையில் வளர்ந்த நாகரிகம் எகிப்திய நாகரிகமாகும். யூப்ரிடீஸ் டைக்ரிஸ் நதிக்கரையில் வளர்ந்த நாகரிகம் சுமேரிய நாகரிகம் என்று போற்றப் படுகிறது. பஃறுளி ஆற்றங்கரையிலும். காவிரி ஆற்றங்கரையிலும் தோன்றிப். பிறகு சிந்து நதிக் கரைக்குச் சென்று வாழ்ந்த நாகரிகம். திராவிட நாக ரிகம் என்று புகழப்படுகிறது. திராவிட நாகரிகத் திற்குப் பிறகு கங்கைவெளியிலும். சிந்து வெளி யிலும் வளர்ந்த நாகரிகம் ஆரிய நாகரிகம் ஆகும். ஹோயாங்கோ. யாங்டிஸ்கியாங் ஆற்று வெளிகளில் வளர்ந்தோங்கிய நாகரிகம் மங்கோலிய நாகரிகம் என்று சிறப்புப்பெறுகிறது.

இந்த இடங்களில் குடியேறிய பிறகுதான். மனிதன் அமைதியான குடும்ப வாழ்க்கையை நடத்தக் கற்றுக் கொண்டான்; தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ள வும் அவனுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாழ்க் கையில். வாழ்க்கையை ஈடேற்றுவதற்காக உழைத்த நேரம் போக, வேறு பல வேலைகளில் ஈடுபட அவ னுக்குப் போதுமான நேரம் கிடைத்தது. அவனுக் குக் கிடைத்த ஓய்வு நேரத்தில். விலங்குகளைப் போல உறங்குவதற்குச் சிறிதளவு பயன்பட்ட போதிலும், மீதி நேரத்தில் புதிய புதிய கருத்துக்களைச் சிந்திக் கவும். புதிய புதிய பொருள்களை உண்டாக்கவும்-கண்டுபிடிக்கவும்—வளர்ச்சியுறச் செய்யவும்-உற்பத்தி யாக்கவும்-இன்பகரமாகப் பயன்படுத்தவும் அவனுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

மனிதன் இப்படிப்பட்ட ஓய்வு நேரத்தை ஒவ் வொருவருக்கும் உண்டாக்கிக் கொடுக்கத் திறமை பெற்ற போதும். அதனை ஆக்க முறையில் பயன் படுத்தக் கற்றுக்கொண்ட போதுந்தான் முன்னேற் றத்திற்கான வழி பிறந்தது என்னலாம்.

ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கான ஓய்வு நேரத்தை, மனிதன் அடைவதற்கு எவ்வளவோ துன் பங்களையும், கொடுமைகளையும், தீமைகளையும் அவன் தாண்டி வரவேண்டி யிருந்தது என்பதை வரலாறு இனிது கூறும்,

அந்த நாட்களில் மனிதன் அடைந்த துன்பங்களில் முதன்மையானது. போதுமான—நிலையான உணவை அடைவதிலே ஏற்பட்ட துன்பந்தான். இதன் காரண மாக உழுது பயிரிட்டு உண்டு வாழ்ந்த உழவர்களுக் கும் நிலையான ஓரிடத்தில் இல்லாத நாடோடிகளுக் கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. தங்களுக்கும் தங்களுடைய ஆடுமாடுகளுக்கும் உணவு வேண்டி அலைந்து திரிந்த நாடோடிகள். உழவர் பயி ரிட்டுத் திரட்டி வைத்திருந்த உணவுப் பொருளை, அவர்களிடமிருந்து கொள்ளையடித்துக் கொள்வது எளிது என்று கருதி, அந்த வழியைப் பின்பற்றத் தொடங்கினர். இந்த நிலைமை போர் வீரர்களைத் திரட்டுவது, போர்ப்படை அமைப்பது. கோட்டை கட்டுவது. கொத்தளம் வகுப்பது. வரி திரட்டுவது, அரசு அமைப்பது. ஆணை செலுத்துவது. பாதுகாப்பு அளிப்பது. குற்றம் குறை களைவது. நீதி அளிப்பது, கலை வளர்ப்பது. கல்வி புகட்டுவது. தொழில் வளர்ப் பது. உற்பத்தி பெருக்குவது இன்பம் விளைவிப்பது போன்றவைகள் படிப்படியாக மனித நாகரிகத்தின் தேவைகளாக மலர்ந்து விட்டன.

மன்றம் கட்டண விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் :: ::	3—0—0	3—12—0
தனி இதழ் :: ::	0—4—0	0— 5—0

Regd. No. M 6296

"மன்றம்" வெளியீடுகள்

—★★★—

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. — விலை ரூ. 0—12—0

ராஜாடி ராஜா!

இரா. செழியன் M. A. — விலை ரூ. 0—12—0

பொது அறிவு

—இரா. செழியன் M. A. — விலை ரூ. 0—8—0

மறைந்த திராவிடம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. — விலை ரூ. 0—3—0

- ரூ. 10-க்குமேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு.
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பி வைக்கப்பெறும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்த வேண்டும்.

விவரங்கட்கு :— நிர்வாகி, "மன்றம்"

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

விற்பனையாளர்க்கு

—(0)—

விற்பனையாளரில் பெரும்பாலோர், தாங்கள் தொடக்கத்தில் கொடுத்த வாக்குறுதிகளை அறவே மறந்துவிட்டு, கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதைக் கண்டு மிக வருந்துகிறோம். அப்போதைக்கப்போது பாக்கி தங்காத வகையில், பட்டியல் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பட்டியல் தொகை முன் கூட்டியே வந்து சேராவிடில், இதழ்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்கிறோம். மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக மட்டுமே தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி, "மன்றம்"

தோழர்களுக்கு

—(0)—

'மன்றத்'தின் வாழ்விலும், வளர்ச்சியிலும் அக்கறை காட்டும் நண்பர்கள், தங்கள் நட்பின் தன்மையை, எவ்வளவுக்கெவ்வளவு மிகவான சந்தாதாரர்களைச் சேர்க்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சேர்ப்பதில், காட்ட வேண்டுகிறேன். இப்படிப்பட்ட சிறு உதவியை ஆங்காங்குள்ள நண்பர்கள் செய்தால், 'மன்றத்'தை இன்னும் நல்ல முறையில் கொண்டுவர ஏது ஏற்படும். 'மன்றம்' பரவாத பகுதிகளில் சந்தாதாரர்களைச் சேர்க்க நண்பர்கள் ஒத்துழைப்பு தர வேண்டுகிறேன்.

ஆசிரியர், "மன்றம்"

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.